Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ் நகரில்
பாடசாலை மாணவர்களுக்கும், அலுவலக உத்தியோகஸ்தர்களுக்கும் ஏற்ற
SILVER SHIELD SOCKS
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் T.P: 222 5392

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 22 (10.08.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:312

### உசன் கிராம மக்கள்

## பிரதேசசெயலகம் முன்பாக நேற்று மறியல்போராட்டம்



(தென்மராட்சி)

சாவகச்சேரி உசன் கிராம மக்கள் நேற்று தமது வீடுகளில் மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதேச செயலக வாயிலை மூடி தமது கல்வி உரிமைகளையும், தமது காணி உரிமைகளையும் பறிக்காதே எனக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உசன் பகுதியில் உள்ள பாடசாலைக்கு அண்மையாக சுமார் 20 இற்கும் மேற்பட்ட வீடுகளை ஆக்கிரமித்துள்ள இராணுவம் வெளியேற வேண்டும் எனவும், உசன்- விடத்தற்பளை வீதியை மக்கள் போக்குவரத்திற்கு திறந்து விட வேண்டும் உசன் பாடசாலை மைதானத்தில் மாணவர்கள் சுதந்திரமாக (12 ஆம் பக்கம் பார்க்க)

### நியமனப் புறக்கணிப்பை எதிர்த்து

## உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகள் யாழ்.செயலகத்தின் முன்பாக மறியல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தின் முனனால் நேற்று யாழ்.மாவட்ட உயர் தேசிய கணக்கியல், வர்த்தக, முகாமைத்துவ வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் மறியல் போராட்டமொன்றை நடத்தினர்.

யாழ்.செயலகம் முன் ஒன்று திரண்ட நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள், பட்டதாரிகள் அரச சேவையில் உள்வாங்கப்படும் போது- தம்மை உள்வாங்க வேண்டும் எனத் தெரிவித்தே இந்தப் போராட்டத்தை நடத்தினர்.



அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் உயர்தேசிய கணக்கியல், வர்த்தக, முகாமைத்துவக் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்தோர் பட்டதாரிகளாகவே கணிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது (12 ஆம் பக்கம் பார்க்க)

### சமாதான முயற்சிகளை எதிர்க்கும்

# ஜே.வி.பியைச் சமாளிக்க தயாராகின்றது பொ.ஐ.மு!

# ஜே.வி.பியைச் சமாளிக்க தயாராகின்றது பொ.ஐ.மு!

(கொழும்பு)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படவிருக்கும் சமாதான முயற்சிகளுக்கு ஆளும் கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் ஜே.வி.பி எதிர்ப்பு தெரிவிக்கும் எனக்கருதப்படுவதால் அதனைச் சமாளிப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி புதிய வியூகம் வகுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.**

இதன் ஒருகட்டமாக பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஒன்றுகூடி ஜனாதிபதி சந்திரிகாவின் சமாதான முயற்சிக்கு ஆதரவு தெரிவிக்க இருப்பதாகவும் கூறப்பட்டது.

இதற்கான கூட்டம் அடுத்த வாரம் கொழும்பில் நடைபெறவுள்ளது. விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக யோசனைக்குப் பதிலாக ஜனாதிபதி சந்திரிகா மாற்று தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைப்பதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்தத் திட்டத்துக்கு ஆளும் கூட்டணியிலுள்ள ஜே.வி.பி கடும் எதிர்ப்புத் தெரிவிக்கும் என்று கருதப்படுகிறது.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி சந்திரிகாவின் கைகளைப் பலப்படுத்த பொதுஜன ஐக்கிய முன்னணி இந்த நடவடிக்கையை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச சமாதான செயலகப் பணிப்பாளர் யாழ்.நிலைவரத்தை நேரில் ஆராய்வு!

(யாழ்ப்பாணம்)

அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து, யாழ்.மாவட்டத்தின் நிலைமைகளை நேரில் அவதானித்தார்.

கொழும்பில் இருந்து விமானம் மூலம் பலாலி விமான நிலையத்துக்கு வருகைதந்த அவர், நேற்றுக் காலை 9.30 மணியளவில் யாழ். செயலகத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

யாழ்.செயலகம் முன் - யாழ். மாவட்ட உயர் தேசிய கணக்கியல் வர்த்தக கணித டிப்ளோமா பட்டதாரிகள் மறியற்போராட்டத்தில் ஈடுபட்டமையால், ஜி.ரி.இசற் நிறுவனத்தின் தங்ககத்தில் வைத்து யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் தீர்வு யோசனையையும் புலிகள் கருத்திலெடுக்க வேண்டுமாம்!

### அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)



இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை மட்டுமல்ல, ஜனாதிபதியின் தீர்வு யோசனையையும் அடிப்படையாகக் கொண்டு பேசுவதற்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வரவேண்டும் என, யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த இலங்கை அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட அவர் - கோவில் வீதியிலுள்ள யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெற்ற பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதய சுத்தியுடனேயே பேச்சுவார்த்தையில் ஈடுபட முயற்சிக்கிறார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி அறிந்து அவற்றிற்குத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பூகம்பத்தை எதிர்நோக்கும் மனநிலையில் தமிழ்மக்கள்

### பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் தனபாலவிடம் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ்மக்கள் பூகம்பத்தை எதிர்நோக்குவது போன்றதொரு மனநிலையில் வாழ்கின்றனர் என, யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளரிடம் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த அரசாங்கத்தின் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவை யாழ்மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நேற்று சந்தித்த போதே - அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

ஜயந்த தனபாலவிடம் அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது -

வடக்கு- கிழக்கில் மீண்டும் தோன்றியிருக்கும் அசாதாரண நிலைமை தமிழ்மக்கள் மத்தியில் பெரும் அச்சவுணர்வை ஏற்படுத்தியுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

## எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர்

# மீளக்குடியமர்வதற்கு அனுமதி வழங்கப்படாவிடின் தென்மராட்சி செயலகத்தை தொடர்ந்து மூடுவோம்!

## வீடுகளின் உரிமையாளர் ஒன்றியம் எச்சரிக்கை

தென்மராட்சி உஷன் கிராமத்தில் இந்த மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் மீளக்குடியேற அனுமதிக்கப்படாவிட்டால், தாம் தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக, தொடர்ச்சியாக மறியற்போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அப்பகுதி பொதுமக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக மறியற்போராட்டம் நடத்திய பின்னர், மனித உரிமைகள் ஆணைக்குழு, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, அரசாங்க அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள உஷன் கிராமத்தில் இருந்து கடந்த 1996 இல் மக்கள் இராணுவத்தால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட பின்னர், அந்தப் பகுதி குடியிருப்புக்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டது. இதனால், வீட்டுச் சொந்தக்காரர்கள் பல வருடங்களாக இடம்பெயர்ந்து நீண்ட நாட்களாக பல கஷ்டங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

உயர்பாதுகாப்பு வலயம் அல்லாத உஷன் கிராமத்திலுள்ள உஷன் மகா வித்தியாலயம் இராணுவ வலயத்தினுள் இயங்கிவருகின்றது. அதனால், பாடசாலைக்குச் செல்லும் மாணவ, மாணவிகள் பல்வேறு இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியில் அச்ச உணர்வுடன் பாடசாலைக்குத் தினமும் சென்று வருகின்றனர்.

இராணுவப் பிரசன்னமானது - மாணவர்களை உளவியல் ரீதியாகப் பாதித்துள்ளதுடன் அவர்கள் கல்வியில் ஆர்வம் செலுத்த முடியாத அளவுக்கு பாதிப்பினை ஏற்படுத்தி உள்ளது. அத்துடன், பாடசாலை மைதானத்தில் மாணவர்கள் சுதந்திரமாக விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபட முடியாதிருப்பதனால், பாடசாலை மட்டப்போட்டிகளில் மாணவர்கள் கலந்துகொண்டு தங்களது ஆற்றல்களை வெளிப்படுத்த முடியாத நிலையில் மேலும் உளவியல் பாதிப்புக்களுக்கு உள்ளாகிறார்கள்.

அத்துடன், பாடசாலைக்கு முன் பாகச் செல்லும் உஷன் - விடத்தற்பளை வீதியைக் காரணம் இன்றிப் படையினர் மூடி வைத்திருப்பதனால், பாடசாலை செல்லும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பல மாணவர்கள் கால்நடையாகவே நீண்டதூரம் சுற்றி நடந்து பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலையில் பாடசாலையை விட்டு இடையில் விலகும் நிலையும் காணப்படுவதுடன், மக்களும் நீண்ட தூரம் சுற்றி பல சிரமங்களின் மத்தியில் பயணம் செய்யவேண்டியுள்ளது.

வீட்டு உரிமையாளர்கள் பல தடவைகள் இராணுவத்தோடு தொடர்பு கொண்டு மீளக்குடியமர அனுமதிக்குமாறும், வீதியைத் திறந்து போக்குவரத்துக்கு அனுமதிக்கும்படி கோரிய வேளையிலும், இராணுவம் அனுமதி மறுத்தே வந்துள்ளது. வீடுகளை இப்போதைக்குத் தரமுடியாதென வற்புறுத்திக்கூறிக்கொண்டு இருக்கின்றார்கள். இந்தநிலையில், விரக்தி அடைந்த மக்கள் மீளக்குடியமர அனுமதி கோரிப்போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளோம்.

கடந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் சாதகமான பதில் தராவிட்டால், நேற்றைய தினம் பிரதேசசெயலகம் முன் மறியற்போராட்டம் நடத்துவோம் என நாம் கடிதம் மூலம் கடந்த 18 ஆம் திகதி அறிவித்திருந்தும் சாதகமான பதில் கிடைக்காத நிலையில், இன்று (நேற்று) அடையாள மறியற்போராட்டத்தினை நடத்துகிறோம். இதற்கு சாதகமான பதில் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் தரப்படாவிட்டால், தொடர்ச்சியான போராட்டத்தினை மேற்கொள்வோமென அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (34,29,25)

## கலைப்பீடத்தின் பொதுக்கூட்டம்

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான பொதுக்கூட்டம் நாளை காலை 10.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளதால் அனைத்துக் கலைபபீட மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கலைப்பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## அனுமதி பெறாத கடைகளை அகற்றக் கோரிக்கை

யாழ்.முனீஸ்வரன் வீதியில் மாநகரசபையின் அனுமதி பெறாமல் புதிதாக நிறுவப்பட்டுள்ள கடைத்தொகுதிகளை அகற்றுமாறு யாழ்.மாநகரசபையால் உத்தரவிடப்பட்டுள்ளது.

கடைகள் அகற்றப்படா விட்டால் மாநகர சபையினரால் மேற்படி கடைத்தொகுதிகளை அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாக தெரிவிக்கும் துண்டுப்பிரசுரங்கள் கடைகளின் கதவுகளில் ஒட்டப்பட்டுள்ளன. (206)

## க.பொ.த உயர்தரப் பரீட்சையின் மேலும் சில பாடசாலை முடிவுகள்

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சையின் மேலும் சில குடாநாட்டு பாடசாலைகளின் முடிவுகள் வருமாறு,

### நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

**கலை**

இ.அகிலன் 3ஏ, சி.தயாளினி 3ஏ, ரூ.ஜீவானந் 2ஏபி, க.ஜீவினி 2ஏபி, ஐ.புருசோத்தமன் 2ஏபி, பு.விமல் 2ஏபி.

**வர்த்தகம்**

த.சிறிவனிதா 2ஏபி, க.கஜீவன் 2ஏபி.

**உயிரியல்**

த.காயத்திரி 2ஏபி, த.கார்த்திகா 3பி.

**கணிதம்**

செ.ஜெயசுதன் 2ஏபி, த.தனுஜா 2ஏபி.

### புத்தூர் சிறி சோமாஸ்கந்தக் கல்லூரி

**கலை**

ம.வதனகீர்த்தனா 3ஏ, த.அம்பிகா 2ஏபி, சி.சிவகௌரி 2ஏபி, கு.சுகிர்தா 2ஏபி, சி.ஜீவனா ஏ2பி, இ.சிந்துஜா ஏ2பி.

**வர்த்தகம்**

ஸ்ரீ.சிவதாஸ் 3ஏ, சி.சிந்துஜா 3ஏ, ஜெ.ஜெனீபன் ஏ2பி.

### பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

**உயிரியல்**

வி.வினோதிகா 3ஏ, செ.யாழினி 2ஏபி, கா.வாருணி 2ஏசி, வை.துஸ்யந்தி ஏ2பி, ச.தர்சிகா ஏ2பி, சி.கார்த்திகா ஏபிசி, பா.அசோதை ஏபிசி, சு.அகல்யா ஏபிசி, ச.சிம்மகி ஏபிசி.

**கணிதம்**

ச.ரேணுகா ஏபிசி

**கலை**

ச.சர்மிளா 3ஏ, சி.நவநிதி 2ஏபி, பா.லோஜினி 2ஏபி, ர.சிந்துஜா 2ஏசி, சி.சிவரஞ்சனி ஏ2பி, ச.சசிப்பிரபா ஏ2பி, அ.இருதயநாயகி ஏ2பி, வெ.உஷா ஏ2பி, தி.நவரட்ணமலர் ஏ2பி, செ.துஸ்யந்தினி ஏ2பி.

**வர்த்தகம்**

க.சுபாசினி 2ஏபி, ஸ்.எழிலரசி 2ஏபி, தி.பிரியா 2ஏபி, த.ராஜினி 2ஏபி, பா.கிரிந்தினி 2ஏசி.

### கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

வர்த்தகம் லோ.கோல்ரன் 2ஏபி, சி.சுரேஸ்குமார் 2ஏபி, கா.கஸ்தூரி 2ஏபி, சி.தவக்குமார் ஏ2பி, த.அச்சுதானந்தர் 2ஏசி, பா.கஜேந்திரன் 3பி, செ.வத்சலா ஏபிசி, வி.சத்தியப்பிரசன்னா ஏபிசி, சி.பாலராணி ஏபிசி, ச.பிரவீனா ஏபிசி, ஐ.கோகிலன் ஏபிஎஸ், செ.செல்வதுஷி 2பிசி, க.தனுஜா 2பிசி, து.ஜீவிகா 2பிசி, ச.லோகானந்தன் 2பிசி, ஐ.ரூபதாசன் ஏ2சி.

**கலை**

மயூரி ஏ2பி, பூ.கலைச்செல்வி ஏபிசி, தே.சிந்துஜா ஏபிசி, சி.தர்ஷா ஏபிசி, ரா.பூமாதேவி ஏ2சி, ரா.ஜினோசா ஏபிஎஸ், யோ.சத்தியவாணி 2பிசி, சி.கௌரி 2பிசி.

**விஞ்ஞானம்**

ப.சத்தியரூபன் 2பிசி

## பல்கலைக்கழக மாணவியின் நகை அபகரித்த நபரை கைதுசெய்ய உத்தரவு!

யுவதியின் நகையை அபகரித்தவருடன் சைக்கிளில் பயணித்தவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், நகையை அபகரித்தவரைக் கண்டறியுமாறு யாழ்.பொலிஸாருக்கு யாழ்.நீதிமனறம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்.நகரப்பகுதியில் நேற்றுமுன்தினம் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பல்கலைக்கழக மாணவி ஒருவரின் நெக்லஸ் ஒன்றை அறுத்துக் கொண்டு ஓடிய நபருடன் சைக்கிளில் வந்த நபர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

இவர் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது - வழக்கை விசாரித்த மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா இவரை எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும், அவருடன் சென்றதாகக் கருதப்படும் மற்றைய இரு சந்தேகநபர்களையும் கைதுசெய்து மன்றில் ஆஜர்படுத்துமாறும் அவர் உத்தரவிட்டார். (ப)

## தேசிய எழுச்சிப் பேரவை செயலகம் சாவகச்சேரியில் திறந்துவைப்பு

தென்மராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலகம் சாவகச்சேரி - கந்தையா வீதியில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் எஸ்.சந்திரசேகரா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பொது ஈகச்சுடரினை மாவீரர் மரியதாசின் சகோதரி ஏற்றிவைத்தார்.

தென்மராட்சி அரசியற்துறைப் பெறுப்பாளர் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை இணைப்பாளர் பிரபா பெயர்ப் பலகையினை திரைநீக்கம் செய்துவைத்தார். பொது அமைப்புக்களின் தலைவர் க.அருந்தவன் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட செயலாளர் சொலமன் சூ சிறில், யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் சிறப்புரையாற்றினர். (34)

## புனித லோறன்சியாரின் திருநாள் இன்று நெடுந்தீவில்!

புனித லோறன்சியார் திருநாள் இன்று மிகவும் பக்திபூர்வமாகவும், சிறப்பாகவும் நெடுந்தீவில் கொண்டாடப்படவுள்ளது.

கடந்த 10 தினங்களாக திருப்பலி இடம்பெற்று - நேற்று மாலை நற்கருணை எழுந்தேற்றம் இடம் பெற்றது. இன்றுகாலை இறுதிநாள் திருப்பலியும், கொடியிறக்கமும், திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, புனித லோறன்சியாரை யூதர்கள் எரித்தபோது அவர் உடல் கருகி சாம்பரானது மதியம் 12 மணிக்காகும். அந்த நேரத்தில் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் நிலத்தைக் கிண்டிப் பார்த்தால் சிறிய சிறிய கரி உருண்டைகள் கிடைக்கும். அவற்றை ஆசி நீரில் குழைத்து நெற்றியில் பூசிக்கொள்வது ஒரு வழக்கமாக இருந்துவருகிறது.

இன்று, சரியாக பழைய நேரம் 12.00 மணிக்கு நிலத்தைக் கிண்டி இக்கரியை எடுக்கப் பலரும் ஆவலுடன் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

புனித லோறன்சியாரின் ஆலயம் வடபகுதியில் நெடுந்தீவில் மாத்திரம் அமைந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (113)

## விளையாட்டுவிழா

திருநெல்வேலி பாரதி சனசமூக முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுவிழா நாளை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த விழாவில் முதன்மை விருந்தினராக நல்லூர் பிரதேசசபை செயலாளர் பொ.வைரமுத்து கலந்துகொள்வார். (லெ)

## நாவலர் வீதி மோதலில் ஒருவர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் மாலை நாவலர் வீதியில் - புகையிரத வீதி சோதனைச்சாவடிக்கு அண்மித்த பகுதியில் நடைபெற்ற மோதலில் ஒருவர் தலையில் படுகாயமடைந்தார்.

மதுபோதையில் இருந்த ஒருவருக்கும் அப்பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும் ஏற்பட்ட மோதல் கைகலப்பில் முடிந்தது.

இதன்போது மதுபோதையில் இருந்தவர் ஒரு பெரிய கல்லைத் தூக்கி வீசிய வேளை - அந்தப் பகுதியைச் சேர்ந்தவர் தலையில் பட்டு காயம் ஏற்பட்டு, பின்னர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். சோதனைச் சாவடியில் கடமையில் உள்ள பொலிஸார் கல் வீசியவரை துரத்திப்பிடித்து சென்றதாகக் கூறப்படுகிறது. (64)

## ஆசாத் வீதியைக் கவனிப்பார் இல்லையா?

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் மேற்கில் உள்ள ஆசாத் வீதியையும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மீண்டும் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரித்துள்ளதால் - கலாசார சீர்கேடுகளும், கோஷ்டி மோதல்களும் நடைபெறுகின்றன.

இரவு வேளைகளில் இந்தப் பகுதிகளில் கசிப்பு அருந்தும் குடிமன்னர்கள் வேறு இடங்களுக்குச் சென்று குற்றச்செயல்களில் ஈடுபடுவதாகக் கூறப்படுகின்றது.

இந்த வீதியால் பயணிக்கும் பாதசாரிகளுக்கும், சைக்கிளில் செல்லும் பயணிகளுக்கும் பெரும் சிரமத்தை ஏற்படுத்தும் இந்த குடிமன்னர்களின் நடவடிக்கைகளை யார், எப்போது தடுத்து நிறுத்துவார்கள் என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கிறார்கள். (64)

## புனரமைப்பு வேலைகள் விரைவில்

யாழ்.நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் இனங்காணப்பட்டுள்ள புனரமைப்பு வேலைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதி குணராஜா தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாநகரசபை அலுவலகத்தில் யாழ்.வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற உத்தியோகபூர்வமற்ற கலந்துரையாடலின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் கூரை, மின் ஒழுங்கு மற்றும் மலசலகூட வசதிகள் போன்றவை புனரமைப்புச் செய்யவேண்டியுள்ளதாகவும், அதற்கான நடவடிக்கைகளை யாழ்.மாநகரசபையினர் உடனடியாக மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## அறநெறி வகுப்பு

மட்டுவில் வடக்கு அருள்மிகு மகாமுத்துமாரி அம்பாள்ஆலயத்தில் அறநெறி வகுப்பு ஒன்று ஆரம்பிக்கப் படவுள்ளது.

ஆலய பரிபாலன சபையும், மட்டுவில் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்தவுள்ள இந்த வகுப்பில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு இலவசமாக கொப்பிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும்.

மாதாந்தம் பரீட்சைகள் நடத்தப்பட்டு சிறந்த பெறுபேற்றைப் பெறும் மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. இந்தப் பயிற்சி வகுப்பின் ஆசிரியராக இளைபபாறிய ஆசிரியை திருமதி அம்பிகை பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார். (24)












நாட்டுப்பற்றாளர் நடேசனின் நினைவாக வவுனியாவில் நடைபெற்ற கருத்துப் பகிர்வும், கருத்தரங்கும் நிகழ்வில் பத்திரிகையாளர் டி. சிவராம் உரையாற்றுவதைக் காணலாம்.

# போர்நிறுத்த ஒப்பந்தத்தை பாதிக்கும் அறிகுறிகள் எதுவும் இப்போதில்லை!

## விதார் ஹெல்கிசன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அரசாங்கத்தின் சமாதானச் செயலகங்களுக்கிடையிலும், போராளிகள் மற்றும் இராணுவ மட்டங்களிலும் தற்போது பேணப்படும் தொடர்புகள், போர்நிறுத்த ஒப்பந்தம் பாதிக்கப்படாது என்பதற்கான சாத்தியமான அறிகுறிகளை வெளிப்படுத்துவதாக நோர்வே தெரிவித்துள்ளது.

இத்தகைய தொடர்புகளைத் தொடர்ந்தும் பேணுவதற்கு இரு தரப்பும் அர்ப்பணிப்புடன் செயற்படுமென நோர்வே நம்புவதாகவும் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியுள்ள பேட்டியில் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தையானது கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக முடக்கமான நிலையில் காணப்படுவதன் காரணமாக, போர் நிறுத்த ஒப்பந்தம் வெகுவாகப் பாதிக்கப்படுமென வலியுறுத்தி வந்தோம்.

போர்நிறுத்த ஒப்பந்தமானது, சமாதான ஒப்பந்தம் அல்ல. இலங்கையில் இடம்பெற்ற அண்மைய வன்முறைச் சம்பவங்கள் உறை நிலையிலிருந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தை அதன் விளிம்புகளில் உருக வைத்ததை யாரும் மறுத்துரைக்க முடியாது.

இதன் காரணமாக இரண்டு தரப்புத் தலைமைகளும் பங்களிப்புடன் செயற்படவேண்டியது அவசியம். நாட்டின் சாதாரண மக்களும் இதற்கான தமது பூரண ஒத்துழைப்பை இரு தரப்புக்கும் வழங்க முன்வர வேண்டும்.



சமாதான முன்னெடுப்புக்களில் நோர்வேயின் பங்களிப்புத் தேவை என்பதை அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளின் முன்னைய மற்றும் தற்போதைய நடவடிக்கைகள் மூலம் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

ஊடகங்களில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அரசாங்கத்தின் முரணான கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றது. நாளுக்கு நாள் மாறுபட்ட தொனியில் வரும் இத்தகைய கருத்துக்கள் குறித்து கவனஞ்செலுத்தவோ, கவலைப்படவோ வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# எந்த சவாலையும் எதிர்கொள்ள நாம் தயாராகவே இருக்கிறோம்

## இராணுவத் தளபதி கூறுகிறார்

கடந்த ஜுலை மாதத்திலிருந்து இடம்பெற்றுவரும் கொலைகளை விடுதலைப் புலிகளே செய்துவருவதாக, இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் சண்டே லீடர் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

தற்போது இடம்பெற்றுவரும் தாக்குதல்களை நோக்கும்போது, அது விடுதலைப் புலிகளாலேயே செய்யப்பட்டதை ஊகிக்கமுடிகிறது. இந்தத் தாக்குதல்கள் பொதுமக்களை நோக்கித் திரும்புமாக இருந்தால், பொதுமக்களின் பாதுகாப்பு மிகவும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படும்.

இந்தப் படுகொலைகள் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை குழப்பும் ஒரு முயற்சியாகும்.

விடுதலைப் புலிகளின் இந்தத் தாக்குதலானது மீண்டும் போரைத் தொடங்குவதற்கான ஒரு நடவடிக்கை என்ற தகவலை நான் நிராகரிக்கின்றேன். இந்த நடவடிக்கைகளால் மீளவும் போர் ஆரம்பிக்கப்படுமென நான் நினைக்கவில்லை.

ஆனாலும், எந்தச் சவாலையும் எதிர்கொள்ளப் படையினர் தயாராகவே உள்ளனர். நாம் எந்தச் சவாலையும் எதிர்கொள்வதற்கான தயார்படுத்தலிலேயே இருக்கிறோம். ஏனெனில் இது எமது கடைமை எனவும் இராணுவ தளபதி மேலும் தெரிவித்தார்.

### காட்டுத் தீயில் பதுங்குகுழிகள் நாசம்

வெலிஓயா காட்டுப் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட காட்டுத் தீயினால் படையினரின் இரண்டு பாரிய பதுங்குகுழிகள் நாசமானதாக இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

திடீரெனப் பரவிய காட்டுத் தீயால் இந்தப் பதுங்குகுழிகள் அழிந்ததாகவும்,

இது திட்டமிட்ட சம்பவமா அல்லது தற்செயலாக இடம்பெற்ற சம்பவமா என்பது குறித்து, படையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகிறது.

(01)

### கூட்டமைப்பு எம்.பிக்கள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி கிளிநொச்சியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுநடத்தவுள்ளனர்.

நாட்டின் இனப்பிரச்சினையின் பிந்திய நிலைவரம், அது கையாளப்பட வேண்டிய அணுகுமுறை என்பன தொடர்பாக இந்தச் சந்திப்பில் ஆராயப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது.

(01)

## பிரச்சினைகளைத் தீர்க்காததற்காக

# பிரித்தானியாவிடம் நஷ்டஈடு அரசாங்கம் கோருமாம்

(கொழும்பு)

இலங்கையில் ஆட்சிசெய்த பிரித்தானிய அரசாங்கம் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் சுதந்திரத்தை வழங்கிவிட்டுச் சென்றதால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பதாகவும் -

இதற்காகப் பிரித்தானியாவிடம் நஷ்டஈடு கோரப்போவதாகவும், மலையக அபிவிருத்தி அமைச்சர் தி.மு.ஜயரட்ண தெரிவித்தார். கண்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர்,

பிரித்தானியா - இலங்கையை ஆட்சி செய்தபோதும் நாட்டுக்குச் சுதந்திரம் வழங்கிச் செல்கையில் பலவிதமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமலேயே சென்றுவிட்டது.

நாட்டின் வளங்களைப் பிரித்தானியர் சுரண்டினர், அதன்மூலம் தமது நாட்டைச் செல்வந்த நாடாக்கினர். ஆனால், தமது ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த இலங்கையை அவர்கள் உரிய முறையில் அபிவிருத்தி செய்யவில்லை.

நாட்டின் கலாசாரத்தை அழித்துவிட்டனர். தோட்டத் தொழிலாளர்களாக இந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்ட தமிழர்களுக்கு உரிய வாழ்க்கையை அவர்கள் பெற்றுக் கொடுக்கவில்லை.

அதேவேளை, இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சினையைக்கூட அவர்கள் உரிய வழியில் கையாளாததன் காரணமாகவே இன்று நாடு பாதாளத்தில் நின்றுகொண்டிருக்கிறது.

எனவே, தாம் பிரித்தானிய அரசாங்கத்திடம் நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்போவதாகவும் அவர் குறிப்பிட்டார். (01)

# வீதி ரோந்தை அதிகரிக்க பொலிஸாருக்கு உத்தரவு

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு, வீதி ரோந்து நடவடிக்கையை அதிகரிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக - பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

அண்மைக்காலமாக நாட்டில் பல்வேறு குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகம், வாகனக் கடத்தல்கள், பாலியல் வன்முறைச் சம்பவங்கள் என்பன அதிகரித்து வருவதையடுத்தே இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இவ்வாறான குற்றச் செயல்கள் அதிகமாக இருப்பதையடுத்து விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் வீதி விபத்துக்கள், ஆட்கடத்தல்கள், கொலை, கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்துவதற்காக, யுத்தத்துக்கு முன்னர் இருந்ததைப் போன்று வீதி ரோந்து நடவடிக்கைகளை அதிகரிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

# காணிப் பகிர்வில் முறைகேடா? மறுக்கிறார் ராஜித சேனரட்ண

(கொழும்பு)

சட்டத்துக்குப் புறம்பான வகையில் காணிகள் பரிமாற்றப்பட்டதாகத் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுககளை - முன்னாள் காணி அமைச்சரும், ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனரட்ண முற்றாக நிராகரித்துள்ளார்.

இது குறித்து தான் அரசாங்கத்துடன் திறந்த விவாதத்துக்குச் செல்லவும் தயாராக இருப்பதாக நேற்றுமுன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்க காலத்தில் மேற்கொள்ளப்பட்ட காணி தொடர்பான பரிமாற்றல்கள் யாவற்றையும் ரத்துச் செய்வதாக தற்போதைய அரசாங்கம் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டதுடன்,

ஜனாதிபதியின் மகன் விமுக்தி குமாரதுங்கவுக்கு வழங்கப்பட்ட காணி தொடர்பான பரிமாற்றத்தையும் அரசாங்கம் ரத்துச் செய்யுமா என முன்னாள் அமைச்சர் ராஜித சேனரட்ண கேள்வியெழுப்பியுள்ளார்.

## இடைக்கால நிர்வாக விவகாரம்

# ஜனாதிபதி சந்திரிகாவின் உத்தரவை மீறும் ஜே.வி.பி!

(கொழும்பு)

ஜனாதிபதியின் உத்தரவையும் மீறி, இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக பொது இடங்களில் ஜே.வி.பி கண்டனம் வெளியிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களோ அமைச்சர்களோ பொது இடங்களில் சமாதானப் பேசசுவார்த்தைகள் தொடர்பான தமது தனிப்பட்ட கருத்துக்களை வெளியிடக்கூடாதென, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா அறிவுறுத்தியிருந்தார்.

ஆனால், இந்த உத்தரவையும் மீறி மாத்தறையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசிய ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச -

இடைக்கால நிர்வாகசபை யோசனையானது தனிநாட்டுக்குரிய கோரிக்கையாகவே அமைந்துள்ளதாகவும், இதனை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமாக இருந்தால் அது முட்டாள்தனமானதாகவே அமையுமெனவும் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக தனிப்பட்ட கருத்துக்களைக் கூறவேண்டாம் என அர சாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சாகளுக்கும் அறிவுறுத்தியுள்ள ஜனாதிபதி சந்திரிகா,

தன்னுடனோ அல்லது ஊடக அமைச்சர் மங்கள சமரவீரவுடனோ கலந்துரையாடிய பின்னரே, இடைக்கால நிர்வாகசபை தொடர்பான செய்திகளை வெளியிடவேண்டும் என, அரச ஊடகங்களுக்கு உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பட்டதாரிகளுக்கு தொழிற் பயிற்சி 500 மில்லியன் ரூபா செலவிடப்படும்

## நிதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்குவதற்காக அரசாங்கம் இந்த வருடத்தில் 500 மில்லியன் ரூபாவைச் செலவிட இருப்பதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

பட்டதாரிகளுக்கான தொழிற்பயிற்சி தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர் -

இந்த நிதி ஆண்டின் வரவு செலவுத் திட்டத்திலிருந்து பெறப்படும். இதற்காக மேலதிக நிதியைப் பெற்றுக்கொள்ளத் தேவையில்லை.

இந்தப் பயிற்சிக்குப் பின்னர் - குறிப்பிட்ட மாகாணசபைகள், பிரதேச செயலகங்களூடாக பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

பெரும்பாலான பட்டதாரிகளுக்கு கல்வி, உள்நாட்டு இறைவரி, சுகாதாரம், வங்கி ஆகிய துறைகளில் வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய சாத்தியமிருப்பதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம மேலும் தெரிவித்தார்.

***** இன்னும் 03 நாட்களில் *****




## 400 கோடி மக்கள் ஒலிம்பிக்கை பார்ப்பர்!

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியை உலகெங்கும் உள்ள 400 கோடி மக்கள் பார்ப்பார்கள் என்று எதிர்பார்ப்பதாக சர்வதேச ஒலிம்பிக் குழு கூறியுள்ளது.

2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக்கை விட மிக அதிகளவான தொலைக்காட்சிகள் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியை ஒளிபரப்புகின்றன.

எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதிவரை நடைபெறும் போட்டிகளை உலகெங்குமுள்ள 300 சனல்கள் 35 ஆயிரம் மணித்தியாலங்களுக்கு ஒளிபரப்பவுள்ளன.

இது புதிய சாதனையாகும். சிட்னி ஒலிம்பிக்கை முன்னர் 370 கோடி மக்கள் பார்த்து ரசித்தனர்.

அதேபோல் முதல்முறையாக ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் மிகவும் அதிகபட்சமாக இம்முறை 202 நாடுகள் பங்கேற்கவுள்ளன.

## ஒலிம்பிக் டிக்கெட் விற்பனை சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது!

ஒலிம்பிக் போட்டிகள் தொடங்க 3 நாட்கள் உள்ள நிலையில் பல்வேறு போட்டிகளுக்கான டிக்கெட் விற்பனை தீவிரமடைந்துள்ளது.

ஆயிரக்கணக்கான கிரேக்க மக்கள் மிக நீளமான வரிசையில் நின்று டிக்கெட்டுகளை வாங்கி வருகின்றனர்.

எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை நடைபெறும் போட்டிகளுக்காக 52 லட்சம் டிக்கெட் தயாராக இருந்தன. கடந்த ஒரு வாரத்துக்கு முன்புவரை இதில் 50 சதவீதத்துக்கும் குறைவாகவே விற்பனையாயின. இதனால், போட்டி அமைப்பாளர்கள் செய்வதறியாது திகைத்தனர்.

இந்த நிலையில் கடந்த ஒரு வாரமாக டிக்கெட் விற்பனை சூடுபிடித்துள்ளது. தினசரி டிக்கெட் விற்பனை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

கடந்த 3 நாட்களில் மட்டும் 1.5 லட்சம் டிக்கெட்டுக்கள் விற்பனையாகியுள்ளன.

அதிக கூட்டத்தை அடுத்து மேலும் பல இடங்களில் டிக்கெட்டுகளை விற்க போட்டி அமைப்பாளர்கள் முடிவுசெய்துள்ளனர்.

தொடக்க விழா நிறைவு விழா மற்றும் பல்வேறு முக்கிய போட்டிகளின் இறுதிப்போட்டிகளுக்கான டிக்கெட்டுக்கள் ஏற்கனவே பெருமளவு விற்பனையாகிவிட்டன.

## சீன ஒலிம்பிக் வீரர்கள் ஏதென்ஸ் புறப்பட்டனர்!



கிரிஸ் தலைநகர் ஏதென்சில் எதிர்வரும் 13 ஆம் திகதி ஒலிம்பிக் போட்டி ஆரம்பமாகின்றது.

இதில் 637 பேர் கொண்ட சீனக் குழு பங்கேற்கிறது. இவர்களில் 240 வீரர், வீராங்கனைகள், 27 பயிற்சியாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அடங்கிய முதல் குழு நேற்று முன்தினம் பீஜிங் விமானநிலையத்திலிருந்து ஏதென்ஸ் புறப்பட்டுச் சென்றது.

சிட்னி 2000 ஒலிம்பிக்கில் மூன்றாம் இடம்பிடித்த சீனா, இம்முறையும் அதிக பதக்கங்களை அள்ளக் காத்திருக்கின்றது.

## போர் விமானத்தில் ஈராக் வீரர்கள்!

ஒலிம்பிக் போட்டிக்கான ஈராக் குழு நேற்று முன்தினம் அவுஸ்ரேலிய போர் விமானம் மூலம் ஏதென்ஸ் சென்றது.

ஏதென்ஸ ஒலிம்பிக்கில் இந்த முறை 48 பேர் கொண்ட ஈராக் குழு பங்கேற்கிறது. இதில் ஓரேஒரு வீராங்கனையாக அலிஹிமாத் இடம்பெற்றுள்ளார். இவர் 100, 200 மீற்றர் ஓட்டங்களில் கலந்து கொள்ளவுள்ளார்.

போர் பாதிப்பிலுள்ள ஈராக் தடகள வீரர்களின் ஒலிம்பிக் கனவை நனவாக்கும் வகையில் போர் விமானத்தை அளித்து உதவியதாக அவுஸ்ரேலிய பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

## துடுப்பாட்டச் சங்கம் தெரிவு!

யாழ். மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் சி.மாதுளன் தலைமையில் வடமராட்சி மென்பந்துத் துடுப்பாட்டச் சங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் வடமராட்சிப் பகுதியிலுள்ள கழகங்களுக்கிடையிலான போட்டியை நடத்துவதாயினும் சரி, போட்டிகளில் பங்குபற்றுவதாக இருந்தாலும் சங்கத்தில் பதிவு செய்தல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக கழகங்கள் தமது பதிவினை சங்கச் செயலாளரிடமோ அல்லது டோறா மல்ரி கொம்பிளாக்ஸிலோ விண்ணப்பத்தைப் பெற்றுப் பதிவுகளை மேற்கொள்ளும்படி சங்கச் செயலாளர் ச.சுவேந்திரன் தெரிவித்துள்ளார். (12)

## இங்கிலாந்து அணி அறிவிப்பு!

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளிடையே 4 டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் முதல் இரண்டில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

இந்த நிலையில் இரு அணிகள் மோதும் 3 ஆவது டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் ஓல்டுடிராப்டில் தொடங்குகிறது. இதில் பங்கு பெற்றும் இங்கிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

அணிவிபரம் வருமாறு-

வோகன் (கப்டன்), திரஸ் கொதிக், ஸ்ராரஸ், ராபர்ட் கீ, தோர்ப், பிளின்ரொப், ஜோன்ஸ், ஜைலஸ், பெட்டி, சைமன் ஜோன்ஸ், ஹோகார்ட், ஹர்மிசன், ஜேம்ஸ் அன்டர்சன்.

### நட்வெஸ்ட் ஒருநாள் கிரிக்கெட்:

# இங்கிலாந்து பெண்கள் அணியிடம் நியூஸிலாந்து 45 ஓட்டங்களால் தோல்வி!



நட்வெஸ்ற் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து பெண்கள் கிரிக்கெட் அணி நியூஸிலாந்து பெண்கள் அணியை 45 ஓட்டங்களால் தோற்கடித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இங்கிலாந்தின் கோவ் நகரில் இடம் பெற்ற நட்வெஸ்ற் சர்வதேச ஒரு நாள் பெண்கள் கிரிக்கெட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்த அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்து ஆரம்பத் துடுப்பாட்ட வீராங்கனைகளுள் ஒருவரான எட்வேட்ஸ் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த நியூட்டன் ரெய்லர் ஜோடி, இரண்டாவது விக்கெட்டுக்காக 78 ஓட்டங்களைப் இணைப்பாட்டமாகப் பெற்றுக்கொண்டது.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 87 ஓட்டங்களாக இருந்தபோது ரெய்லர் - வட்சலின் பந்துவீச்சில் மசனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் 51 பந்துகளில் 41 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

தொடர்ந்து ஆடுகளம் வந்த கொனோர் - 15 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், மசனின் பந்துவீச்சில் வட்சனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 155 ஆக இருந்த நிலையில், நியூற்றன் 57 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். இவர் 90 பந்துகளைச் சந்தித்து 6 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 57 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

தொடர்ந்து ஆடுகளம் வந்த கிறீன்வே 48 பந்துகளில் 36 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் பெரிதும் சோபிக்காத நிலையில் இங்கிலாந்து பெண்கள் அணி, 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் மலிக்கன் இரண்டு விக்கெட்டுக்களையும், ஸ்ரீவி, மைக்நெனில், புறூக், மசன், வட்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 222 என்ற வெற்றி இலக்கினை நோக்கித் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து 46.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 176 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

நியூஸிலாந்து அணி தனது முதலாவது ஓவரிலே, முதலாவது விக்கெட்டினை இழந்தது. ஆனாலும், மறுமுனையில் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய ப.்.கி 120 பந்துகளைச் சந்தித்து 64 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.



நியூசிலாந்து அணி சார்பாக லுவிஸ், மக்சிளஷான் ஆகியோர் முறையே 24, 25 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். ஏனைய வீரர்கள் மிகவும் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். இறுதியில் நியூஸிலாந்து அணி 46.5 ஓவர் களில் 176 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில், 23 உதிரி ஓட்டங்களாகும்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக பியேஸ்சன் 33 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், பிறிச் 43 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், குகா 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், கெனோ ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இது இங்கிலாந்து பெண்கள் கிரிக்கெட் அணியின் முதலாவது சர்வதேச ஒருநாள் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.




### ஆசியக் கிண்ண உதைபந்தாட்டம்:

# இறுதிப்போட்டி சர்ச்சையால் பதக்கம் பெற சீனா மறுப்பு!

ஆசியக் கிண்ண உதைபந்தாட்டம் சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளது. தமது அணிக்கு அநீதியிழைத்துவிட்டனர் என்று குற்றம் சாட்டி, சீன அணி பயிற்சியாளர் பதக்கத்க ஏற்க மறுத்துவிட்டார்.

பதின்று அணிகள் பங்கேற்ற ஆசியக்கிண்ண உதைபந்தாட்டத் தொடர் சீனாவில் நடைபெற்றது.

பீஜிங் நகரில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் 3:. என்ற கோல் கணக்கில் சீனாவை வீழ்த்தி ஜப்பான் சம்பியன் பட்டத்தை வென்றது.

இந்தப் போட்டியில் நடுவர்கள் அளித்த சில முடிவுகள் சர்ச்சையைக் கிளப்பின. குறிப்பாக ஜப்பான் வீரர் கையால் தள்ளிவிட்டு அடித்த கோலை, சீன வீரர்களின் எதிர்ப்பையும் மீறி, அதை கோலாக அறிவித்தார் குவைத் நடுவர் சாத் கமீல்.

அவர் கொடுத்த தண்டனை உதை வாய்ப்பும் ஜப்பான் வெற்றிக்கு காரணமாக அமைந்துவிட்டது. இதனால் கொந்தளித்துப்போன சீன ரசிகர்கள், ஜப்பான் அணிக்கெதிராக கோஷம் எழுப்பியபடி போட்டி முடிந்ததும் பெரும் வன்முறையில் இறங்கினர். பொலிஸார் தடியடிப்பிரயோகம் நடத்தி வன்முறையைக் கட்டுப்படுத்தினர்.

இது ஒருபுறமிருக்க, ஆட்டம் முடிந்ததும் நிருபர்களைச் சந்தித்த சீனப் பயிற்சியாளர் ஏரி ஹான்,

குவைத் நடுவர் எங்களுக்கு அநீதி இழைத்துவிட்டார். வேண்டுமென்றே நாங்கள் தோற்கடிக்கப்பட்டோம். இப்படியான ஒரு தோல்வியை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என ஆவேசமாகப் பேட்டியளித்தார். அத்துடன், இரண்டாம் இடம் பிடித்ததற்கான பதக்கத்தை வாங்க மறுத்து வெளியேறிவிட்டார்.

இதனால், ஆசிய உதைபந்தாட்ட அமைப்பு கடும் கோபம் அடைந்துள்ளது. ஆசிய உதைபந்தாட்ட அமைப்பின் தலைவர் பீற்றர் வேலப்பன் அளித்த பேட்டியில் -

ஜப்பான் போன்ற ஒரு வலுவான அணியிடம் கிடைத்த தோல்வியை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் வேண்டும். ஏரிஹான் தனது செயலால் இரு அணிகளை மட்டுமல்ல - பார்வையாளர்கள், முக்கிய பிரமுகர்கள் அனைவரையும் அவமதித்துவிட்டார்.

தனது மரியாதைக் குறைவான நடவடிக்கையால் உதைபந்தாட்ட அமைப்பையும் வேதனைப்படுத்திவிட்டார். இதுபோன்ற முக்கியமான போட்டிகளின்போது, விளையாட்டு உணர்வுகளை நாகரிகமாக வெளியிடத் தெரிந்திருக்க வேண்டும் என்றார் வேலப்பன்.

## தாச்சி சுற்றுப்போட்டி

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் மாபெரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 5 மணிக்கு சுதுமலை நாவலர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் -

இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி உதய சூரியன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

# இலங்கையரான சுரேஷ் இன்னொரு உலகசாதனை!


இலங்கையைச் சேர்ந்த சுரேஷ் ஜோக்கிம் என்பவர், ஓடும்போது இதயத்துடிப்பை அளக்க உதவும் டிரட்மில் என்ற சாதனத்தில் தொடர்ந்து ஒரு வாரம் ஓடி கின்னஸ் சாதனை படைத்தார்.

பாரிஸில் உள்ள ஜிம் ஒன்றில் இவர் இந்தச் சாதனையை நிகழ்த்தினார்.

168 மணி நேரத்தில் 559.27 கிலோ மீற்றர் இவர் ஓடினார்.

அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த டேவிட் ரெய்லர் 455.83 கிலோமீற்றர் தூரம் ஓடியதுதான் இதுவரை சாதனையாக இருந்தது.

8 மணி நேரங்களுக்குள் ஒரு முறை 20 நிமிடம் ஓய்வெடுத்துக் கொண்டதாகக் கூறிக்கொள்ளும் சுரேஷ், ஏற்கனவே 5 முறை கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.



கனடாவில் ரோஜர்ஸ் கிண்ணத்துக்கான ரெனிஸ் போட்டி நடந்தது. இதன் இறுதியாட்டத்தில் ரஷ்ய வீராங்கனை எலீனா அடித்த பந்தை பிரான்ஸ் வீராங்கனை மவ்ரஸ்மோ திருப்பி அனுப்பிய காட்சி. இதில் மவ்ராஸ்மோ 6-1, 6-0 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

# சகல துறைகளிலும் பயன்படுத்தக்கூடியவாறு கணினிப் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும்

## லண்டன் தமிழ்ப் பேராசிரியர் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

நாட்டுப்பற்றும், ஆர்வமும் விவசாயிகளுக்கே அதிகம் உண்டு. ஏனைய துறைகளில் எவ்வளவு தூரம் கணினி புகுந்துள்ளதோ, அதேயளவுக்கு கணினியை விவசாயத் துறையிலும் பயன்படுத்த முடியும்.

ஏனைய வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ளதுபோல, எமது விவசாயத்துறையும் வளரவேண்டும். நமது நாட்டில் கணினிக் கல்வி வளர்ச்சியடைந்துள்ளபோதும், தேவையான துறைகளில் அதனைப் பயன்படுத்த வேண்டும்.

அதற்குரிய பயிற்சிகளை கணினிக் கல்வி நிறுவனங்கள் வழங்க வேண்டும். வியாபாரிகள், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் அலுவலர்களுக்கும், சிறுவர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும்.

இவ்வாறு தமிழ் தகவல் தொழில நுட்ப ஒருங்கமைப்பின் லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இலவச கணினிப் பயிற்சி நிலையத் திறப்புவிழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய - லண்டன் கோல்ட்ஸ்மித் கல்லூரிப் பேராசிரியர் கே.சிவா பிள்ளை தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் - தனது உரையில் தென் பகுதி போல, எமது பகுதியும் சகல துறைகளிலும் முன்னேறவேண்டும். சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராகப் போராடி, இன்று ஓர் இடைக்கால சமாதான நிலையை அடைந்துள்ளோம்.

இது தொடர்பாக நாம் இடைக்கால நிர்வாக சபையைக் கோரி நிற்கின்றோம். அது கிடைக்கப்பெறும் பட்சத்தில், நாம் உரிய அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தி, எமது நாட்டை அபிவிருத்தி செய்யப் பாடுபடுவோம் எனத் தெரிவித்தார். (24)

வலிகாமம் பகுதியில்

# டெங்குநோயால் பீடிக்கப்பட்ட 15 பேர் இனங்காணப்பட்டனர்

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தற்சமயம் 15 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு ஆளாகியிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்தில் கடந்த வாரம் காய்ச்சலால் பீடிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் இது தெரியவந்துள்ளது.

இந்தப் பிரதேசத்தில் டெங்கு நோயின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த, சுகாதாரப் பகுதியினர் விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதனை அலட்சியமாக விடப்படுமாயின், இந்தப் பிரதேசத்தில் டெங்கு நோய்த் தாக்கத்தால் பெருமளவு மக்கள் பாதிக்கப்படுவர்.

தற்போது இந்தப் பகுதியில் 15 பேர் டெங்குநோய்த் தாக்கத்துக்கு உள்ளாகி இருப்பதாக இனம் காணப்பட்டுள்ளமை, பொது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (100)

# கால்நடை மருத்துவர் பொலநறுவைக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

மத்திய அரசின் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின், நேரடி நிர்வாகத்தின் கீழ் திருநெல்வேலியில் இயங்கிவந்த கால்நடை புலனாய்வு நிலைய மருத்துவர் ரி.புவிராஜன் நேற்று முதல் பொலநறுவை மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்துக்குப் புதிதாக ஒருவர் நியமனம் செய்யப்படாமையால், இந்த நிலையத்தினது செயற்பாடுகள் பெரியளவில் பாதிக்கப்பட வாய்ப்பிருப்பதாக பண்ணையாளர்களால் விசனம் தெரிவிக்கப் படுகின்றது.

பேராதனையிலுள்ள கால் நடை ஆராய்ச்சி நிலையத்துடன் உடனுக்குடன் தொடர்புகளை ஏற்படுத்தி, இந்த மாவட்டத்தில் பண்ணை விலங்குகளுக்கு ஏற்படும் நோய்களுக்கு, உரிய தீர்வுகளையும், ஆலோசனைகளையும் வழங்கி வந்த திருநெல்வேலி கால்நடை புலனாய்வு நிலையச் செயற்பாடுகள் - முழுநேர மருத்துவர் ஒருவரை நியமிக்காமை காரணமாக நிறுத்தப்படுவது யாழ்.மாவட்ட பண்ணையாளர்களுக்கு ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (31)

வலி.தென்மேற்கு பிரதேசசெயலர் பிரிவில்

# மீள் நடுகை செய்தால் மட்டுமே பனை தறிக்க இனிமேல் அனுமதி!


(வலிகாமம்)

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுகளில், பொது மக்கள் தமது தேவைகளுக்குப் பனைமரம் தறிக்க வேண்டுமாயின், பனைமரம் மீள்நடுகை செய்தால் மட்டுமே பனைமரம் தறிகக அனுமதி வழங்கப்படும்.

இவ்வாறு - அண்மையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்ற வலி.தென்மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பேசும்போதே, பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா தெரிவித்தார்.

எனவே, பிரதேச செயலர் பிரிவில் செயற்படும் அனைத்து பொது அமைப்புக்களும், ஆர்வமுள்ள அனைவரும் இந்தச் சமூகப்பணியில் ஈடுபடுதல்வேண்டும்.

எமது பிரதேசத்தில் பனைமரம் அழிந்துவரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அத்துடன், பனைமரத்தின் பாவனையின் தேவையும் அழிக்கப்பட்டுள்ளன. எனவே, பனைமரம் மீள் நடுகைச் செய்கையை அனைவருக்கும் ஊக்குவிக்கவேண்டும் என்றார். (100)



வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் தெல்லிப்பளை மற்றும் அளவெட்டி குடும்ப முன்பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவனொருவருக்கு வலி.வடக்கு அரசியற்துறை பொறுப்பாளர் இ.சரவணன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

பட்டப்பகலில் யாழ்.நகரில்

# நெக்லஸை அபகரித்த மூவரில் ஒருவர் சிக்கினார்

வீதியால் சென்றுகொண்டிருந்த பல்கலைக்கழக மாணவி ஒருவரின் கழுத்திலிருந்த நெக்லஸ் - திருடர்களால் அறுத்துச் செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் யாழ். நகரின். மணிக்கூட்டு வீதிப்பகுதியில் நடைபெற்றது. இந்தச் சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது -

நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் கணினிக் கல்வி நிலையத்துக்கு கல்வி கற்பதற்காக இரு யாழ். பல்கலைக்கழக மாணவிகள் வீதியால் சென்று கொண்டிருந்தசமயம், அந்த வீதியால் சைக்கிளில் வந்த மூவரில் ஒருவர் மாணவியின் கழுத்தில் கிடந்த நெக்லஸை அறுத்தெடுத்தனர்.

இதனால் அதிர்ச்சியடைந்த மாணவி கூக்குரலிட்டதையடுத்து, அந்த மூவரில் ஒருவரை அங்கு நின்ற பொது மக்கள் மடக்கிப்பிடித்தனர். ஏனைய இருவரும் தப்பிச்சென்றனர்.

பொதுமக்களால் பிடிக்கப்பட்டவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்படார். இவர் ஐந்து சந்திப் பகுதியைச் சேந்தவர் எனத் தெரிய வருகிறது.

எனினும், மாணவியின் கழுத்திலிருந்து நெக்கிலஸைப் பிடுங்கியவர் தப்பித்துச் சென்றுள்ளார். அவரைப் பிடிக்கும் முயற்சியில் யாழ். பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

### சிரமதானம்

மட்டுவில் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில், முத்துமாரி கோயில் வீதியையும்- பொற்கொல்லர் வீதியையும் இணைக்கும் சுமார் ஐந்நூறு மீற்றர் நீளமான ஒழுங்கையின் ஒரு பகுதி அண்மையில் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

பற்றைகள் வளர்ந்து, போக்குவரத்துச் செய்யமுடியாது ஒற்றையடிப் பாதையாக இருந்த ஒழுங்கை - தற்போது துப்புரவு செய்யப்பட்டு, போக்குவரத்துக்கு உகந்ததாக மாற்றப்பட்டுள்ளது. (24)

### மஹாஹோமப் பெருவிழா

சுழிபுரம் பாலாம்பிகாதேவி சமேத வைத்தீஸ்வரா தேவஸ்தானத்தில் நாளை ஏகாதச ருத்திர மஹா ஹோம் பெருவிழா நடைபெறவுள்ளது.

காலை 7 மணிமுதல் விநாயகர் வழிபாடு, கணபதி ஹோம், மஹாலஷ்மி பூஜை, ஹோமம் என்பன நடைபெற்று தொடர்ந்து அபிஷேகங்கள் இடம்பெறும்.

ஹோமப் பெருவிழா இணுவையூர் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவ ஸ்ரீ தா.மகாதேவக் குருக்களால் நடாத்தப்படும்.

# திருடப்பட்ட மாட்டின் இறைச்சியை விற்றவர்கள் பிடிபட்டனர்

கப்பூது வெளியில் மேய்ச்சலுக்கு கட்டப்பட்டிருந்த வண்டில் மாட்டைத் திருடி, அதனை இறைச்சியாக விற்பனை செய்த நபர்கள் சமூக மேம்பாட்டுக் குழுவினரிடம் சிக்கினர்.

கரவெட்டி கப்பூதைச் சேர்ந்த சினனத்தம்பி சிவபாக்கியநாதன் என்பவர் தனது மாட்டை மேய்வதற்காக கப்பூது வெளியில் கட்டியிருந்தார்.

18 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த மாடு - அந்த இடத்தைச் சேர்ந்த நால்வரால் பிடித்துச் சென்று, வெட்டி - இறச்சியை வல்வெட்டியில் உள்ள இறைசசி விற்பனையாளர் ஒருவரிடம் விற்றுக்கொண்டிருந்த வேளை, விழிப்புக்குழுவினரிடம் சிக்கிக்கொண்டனர்.

இவரிடமிருந்து 60 கிலோ இறைசசி மீட்கப்பட்டதுடன், வெட்டப்பட்ட மாட்டை கப்பூது வெளியில் தான் பிடித்ததாகவும் ஒப்புக்கொண்டனர்.

மாட்டின் உரிமையாளருக்கு நட்டஈட்டினை வழங்குவதற்கு குறித்த நபர்களை உடன்பட்டதை அடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டனர். (13)

### கிராம முன்னேற்றச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

வடமராட்சி கிழக்கு வத்திராயன் கிராமத்துக்கான கிராம முன்னேற்றச் சங்கத்தின் புதிய அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வத்திராயன் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தில் , வத்திராயன் கிராம அலுவலர் ந.பாலசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் கிராம மட்ட காணி பயன்பாட்டுக்குழு புனரமைப்பு கூட்டமும் நடைபெறவுள்ளது. (17)

### மருதங்கேணி சமுர்த்தி வங்கி விரைவில் திறப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் ஆரம்பிக்கப்பட்ட மருதங்கேணி சமுர்த்தி வங்கிக்கான கட்டட வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

இந்தக் கட்டடம் 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது சமுர்த்தி வங்கி இதுவாகும். தற்பொழுது இந்த வங்கி - தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

இந்தக் கட்டடம் விரைவில் பூர்த்திசெய்யப்பட்டு, சில வருடத்துக்குள் திறந்து வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (17)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்



பெயர் : ச.சங்கவி
முகவரி : இன்பர்சிட்டி

ஆறாவது அகவையில்



பெயர் : மோ.தர்சன்
முகவரி : இல: 95, பெரியகுளம்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


# சாவகச்சேரி டச்சு வீதியில் கணினி பயிற்சி நிலையம்

(சாவகச்சேரி)

தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின் அனுசரணையுடன், லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இலவச கணினிப் பயிற்சி நிலையம் - சாவகச்சேரி டச்சுவீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்குத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் - மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம், பெயர்ப் பலகை திரைநீக்கம், கணினிக்கூடத் திறப்பு என்பன இடம்பெற்றன.

இந்த நிகழ்வின், ஆசியுரையை திருக்கணித நிலைய அதிபர் சிவ ஸ்ரீ சி.சிதம்பரநாதக்குருக்கள் நிகழ்த்தினார். யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் சி.கிருஷ்ணகுமார், தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பின் பணிப்பாளர் சபை உறுப்பினர் உ.ஜெயதீபன், வைத்திய கலாநிதி எஸ்.எஸ்.அருளானந்தம், தென்மராட்சி மக்கள் நலன் காப்பகத்தைச் சேர்ந்த ஜே.ஜெயக்குமார், கிராம அலுவலர் வி.இராஜரட்ணம் உட்படப் பலர் உரைநிகழ்த்தினர்.


முற்றிலும் இலவசமாக நடாத்தப் படவுள்ள இந்தப் பயிற்சிநெறியில் கலந்துகொள்ள விரும்பும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்கள் - தத்தமது கிராம அலுவலர் ஊடாக விண்ணப்பித்து, அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (24)




# நீச்சல் கான்கள்

நீச்சல் தடாகங்களில் பயன்படுத்தப்படுகின்ற நீச்சல் பிரிப்புக் களைத் தயாரிக்கும்போது, மிக வும் நுட்பமாகத் தயாரிக்கப்படுகின்றன.

அத்துடன், இதை அமைக்கும் பொறியியலாளர்கள் பலதரப்பட்ட அம்சங்கங்களைக் கருத்தில் கொள்கிறார்கள். இதேவேளை - ஒரு பொறியியல் மாணவன் மற்றவர் எல்லோரும் பிரமிக்கும் வண்ணம் ஒரு நீச்சல்கான் அமைப்பை உருவாக்கி, 10 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண் களை வென்றிருக்கின்றார்.



நீருக்குள் பிரிப் புக்களை அமைக் கும் பொழுது சில ஒளி அலைகளின் மூலமும் கான்கள் பிரிக் கப்படுகின்றன.

அத்துடன், இந்த அமைப்பு நடக்கப்போகும் ஒலிம்பிக்போட்டிகளின் போது, பயன்படுத்தப்பட இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். சில தடாகங்களில் பிளாஸ்ரிக் பந்துகள் காணப்படுகின்றன.

அவை அவ்வளவு சிறப்பானதாக இல்லை. ஏனெனில், நீச்சல் வீரர்களுக்கு அவை எரிச்சலூட்டக்கூடியவை. ஆனால், பிளாஸ்ரிக்காலான சிறிய கீலங்கள் தடாகங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. இவையும் சிலவேளைகளில் பொருத்தமானதாக இல்லை. ஏறக்குறைய 3 மீற்றர் அகலம் கொண்ட நீச்சல்கான்கள் காணப்படுகின்றன. நீந்துபவர்களுக்கு மட்டுமல்ல, மத்தியஸ்தர்களுக்கும் வசதியாக, மத்தியஸ்தம் செய்வதற்கு உதவுகின்றன.

# புகையில் வாழும் பெண்கள்

உலகளாவியரீதியில் பெண்கள் ஆண்களிலும் பார்க்க அதிகம் புகைப்பிடிப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனாலும், சில இடங்களில் பெண்கள் உளத்தாக்கத்துக்கு முகங்கொடுத்திருக்கின்றார்கள்.




அமெரிக்க உளவியல் நிறுவனத்தின் ஆராய்ச்சிகளின்படி, புகைப்பிடித்தல் பெண்களுக்கு மிகவும் தீங்குவிளைவிக்கும் என்பது உளவியல் சிகிச்சை மூலம் கூறப்பட்டிருக்கின்றது.


பெண்கள் புகைப்பிடிப்பதால், பாலியல்ரீதியில் உணர்ச்சிகளால் தூண்டப் படுகின்றார்கள். ஆகவே, அவர்களின் ஓமோன்கள் சில - புகைப்பிடிப்பதால் சடுதியாகத் தூண்டப்படுகின்றன. ஆண்களுக்குப் புகைப் பிடிப்பதால் எந்தளவுக்கு உற்சாகம் பொங்கி வழிகின்றதோ அதேயளவுக்குப் பெண்களுக்கும் உற்சாகமும் பொங்கிவழிவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பக்க விளைவுகள் சரியாகப் புகைப் பிடிப்பதனால் அதிகரித்திருக்கின்றன. பெண்கள் புகைப் பிடிப் பது தடைசெய்யப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# சந்திரனில் கனிப்பொருட்கள்

சந்திரனில் காணப்படுகின்ற பாறைகளைப் பற்றி தற்போது ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதன் மூலம் சந்திரனில் காணப்படுகிற பாறைகளிலுள்ள, கனியங்களைப் பற்றி ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதேவேளை 30 வகையான கனியப்பொருட்கள் அங்கே படிமங்களாகக் காணப்படுகின்றன.





சந்திரனிலுள்ள பாறைகள் இயற்கையாக உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதில் சில சந்தேகங்கள் எழுந்திருக்கின்றன.

அங்கே இருக்கின்ற பாறைகள் பல வருடங்களுக்குப் பிறகு உடைகின்றன. கடைசியாக 340,000 வருடங்களுக்கு முதல் பாறைகள் சந்திரனில் உடைந்தன. அதற்குப் பிறகு அங்கே எந்தவிதமான பாறை உடைவுகளும் ஏற்பட வில்லை. சந்திரனில் காணப்படுகின்ற சில தரைத்தோற்ற அம்சங்கள் ஓமான் நாட்டிலும் காணப்படுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.


சந்திரனிலுள்ள பாறைகளை ஆராய்ச்சிசெய்வதற்கு ஓமானிலுள்ள தரைத்தோற்ற அம்சங்களை ஆராய்ச்சி செய்வது பெரிதும் உதவியாக இருக்கின்றது என விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள்.

# இரகசிய அலாரம்

தரையில் வாழுகின்ற அணில்கள் மிக நுண்ணிய ஒலியலைகளைக் கேட்க வல்லது என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

அணில்கள் தங்களுக்கிடையே பேசிக் கொள்ளும் மிக நுண்ணிய ஒலியலைகள் சாதாரண மக்களுக்குக் கேட்காது. எத்த னையோ மிருகங்கள் இருந்தாலும், இந்தக் தரை அணில் களைப்போல, அதிகூடிய கேட் கும் வல்லமை கொண்ட மிருகங்கள் குறைவு.





அல்ட்ரா சொனிக் ஒலியலைகளைத் துல்லியமாக உணரக்கூடியவை வௌவால்கள் ஆகும். இந்தவகை அணில்களைப் பற்றிய ஆய்வுகள் கனடா மற்றும் வட அமெரிக்கா ஆகிய நாடுகளின் புல்நிலங்களில் செய்யப்பட்டன.

இந்த அணிலினங்கள் தங்களுக்குள் பேசிக் கொள்கின்றன. இந்தச் சத்தங்கள் சில வேளைகளில் மனிதர்களுக்கும் கேட்கக் கூடியதாக இருக்கும்.


இது மிகவும் தாழ் ஒலிகளாக இருக்குமென விஞ்ஞானிகள் கருதிக்கொண்டிருக்கிறார்கள். அணில்கள் தங்களுக்கு ஆபத்து வரும்போது எச்சரிகை ஒலிகளை எழுப்புகின்றன.

இந்த எச்சரிக்கை ஒலி, மற்ற மிருகங்களுக்குக் கேட்கக்கூடாது.

ஆகவே, அவைகளுடைய தொடர் பாடல் ஒரு இரகசிய அலாரம் - ஒலியாக இருக்கிறது.

# மிருக வேட்டைக்கு ஆப்பு

மிருகங்களுக்குள்ள உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் சர்வதேசமுமே உறுதியாக இருக்கின்றது. அரசாங்கத்தின் உள்துறை அமைச்சுக்களிடம் பொறுப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. சிறிய சிறிய அரிதான விலங்குகள் கடத்தப்படுவதை உள்துறை அமைச்சுக்கள், உள்ளூர் பொலிஸ் நிலையங்களுக்கு அறிவித்து, அதனைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றன.



சட்டபூர்வமற்ற முறையில் கடத்தப்படுகின்ற குரங்கினங்கள் பெருவாரியாக ஐரோப்பாவில் உள்ளூர் பொலிஸ் அதிகாரிகளிடம் பிடிபட்டிருக்கின்றன. தேசிய ரீதியில் 50 தடுப்புப் படைகள் ஐரோப்பிய நாடுகளில், இந்த மிருகங்களின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்டிருக்கின்றன. 2001 ஆம் ஆண்டு கிரிமினல் சட்டத்திருத்தமாக இது கொண்டு வரப்பட்டது. 43 பேர் இங்கிலாந்தில் மிருகங்களைப் பாதுகாக்கும் அமைப்புக்காக விசேடமாக பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றார்கள்.



மிருகங்களைக் கொடூரமான முறையில் வேட்டையாடுபவர்களுக்குக் கொலைக் குற்றத்துக்குரிய தண்டனை வழங்குமாறு சிபாரிசு செய்யப்பட்டு இருக்கிறது. ஆனாலும் மிருக வேட்டை தொடரத்தான் செய்கின்றது.

# திரை விமர்சனம்



பலகாலமாக திகில் படங்களைப் பார்க்காத தமிழ் சினிமா ரசிகர்களுக்கு இந்தப் படம் வந்திருக்கின்றது. ராம்கோபாலின் 'பூத்' என்ற இந்தப் படத்திலுள்ள தமிழில் "ஷாக்" ஆக வெளியிட்டிருக்கின்றார் இயக்குநர் தியாகராஜன்.


## ஷாக்

பிராசாந் தன்னுடைய மனைவி மீனாவுடன் ஒரு மாடிக் கட்டடத்துக்குக் குடிவருகின்றார். ஏற்கனவே அங்கே குடியிருந்த மஞ்சு என்ற இளம்பெண்ணும், அவளுடைய 7 வயது மகனும், மாடியிலிருந்து வீழ்ந்து இறந்துவிடுகின்றார்கள். அதைப் பிரசாந் தெரிந்திருந்தும் உதாசீனப்படுத்துகின்றார். ஆனால், மீனாவின் கண்களுக்கு மஞ்சு திடீர் திடீரெனத் தோன்றித் திகிலூட்டுகின்றாள். இதேவேளை மீனாவுக்குப் பேய் பிடிக்கின்றது. மீனா காவலாளியைக் கொடூரமாகக் கொலை செய்கின்றார். இன்ஸ்பெக்டர் தியாகராஜன் இதை விசாரிக்கின்றார். அத்துடன், பேய் விரட்டுபவராக சுகாசினியும் வருகின்றார். பேய் மஞ்சுவிடம் இருந்து எப்படி மீனா விடுக்கப்படுகின்றார் என்பதுதான் மீதிக் கதை.

– ஜெயா –

# ஒலிக்கும் இசை

அப்பிள் கணினி நிறுவனமும், மோட்டோரோலா கம்பனியும் சேர்ந்து, புதிய புதிய இசை ஒலிகளை டிஜிற்றல் முறையில் கொடுத்திருக்கின்றன. மோட்டோரோலா மொபைல் போன்கள் அற்புதமான இசையை வாடிக்கையாளர்களுக்குக் கொடுக்க இருக்கின்றன.



மோட்டோரோலா ஆனது உலகின் இரண்டாவது பெரிய தொலைபேசிக் கம்பனி என்ற பெயரை 2005 ஆம் ஆண்டு பெறுவதற்கான ஒரு அற்புதமான முயற்சியாகும் எனத் தொழில்நுட்பவியலாளர்கள் கூறுகின்றார்கள். தற்போது கையடக்கத் தொலைபேசிகளைப் பாவிக்கின்ற மக்கள்,

கூடுதலாக இசையை விரும்புகின்றார்கள். அத்துடன், டிஜிற்றல் இசையை அழைப்பொலிகளாகக் கையடக்கத் தொலைபேசிகளில் பாவிக்கப்படுகின்றன.

அப்பிள் கம்பனிகளின் பங்குகள் 31.26 அமெரிக்க டொலர்களாகவும், மோட்டோரோலா கையடக்கத் தொலைபேசிகளின் பங்குகள் 15.42 அமெரிக்க டொலர்களாகவும் விற்பனையாகின்றன.

உண்மையில் கையடக்கத் தொலைபேசிகளின் டிஜிற்றல் தரம் அதிகரித்திருக்கின்றது.

# புதிய பரிணாமத்துடன் கையடக்கத் தொலைபேசிகள்

மொபைல் தொலைபேசிகளின் வகைகளில், ஒரு காலத்தில் சந்தையைக் கைப்பற்றிய மோட்டோரோலா தொலைபேசி இப்போது மீண்டும் சந்தையில் கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்திருக்கின்றது. இதிலே காணப்படுகின்ற அதிநவீனமான விடியோ கமராக்கள் - மற்றைய கையடக்கத் தொலைபேசிக் கம்பனிகளைத் திகைக்க வைத்திருக்கின்றன.



சாம்சங் மற்றும் நொக்கியா ஆகியன இப்படியான தொலைபேசி வகைகளை இன்னும உற்பத்தி செய்யவில்லை. உலகளாவிய ரீதியில் - கையடக்கத் தொலைபேசி நிறுவனங்களில் இரண்டாம் இடத்தைத் தற்போது மோட்டோரோலா நிறுவனம் பெற்றிருக்கிறது. எல்ஜி நிறுவனம் தனது கையடக்கத் தொலைபேசியின் பரிணா மங்களை மாற்றி சந்தையில் விட்டிருக்கின்றது.

அதேவேளை - ஜேர்மன் தயாரிப்பாகிய சீமென்ஸ் தொலைபேசி நிறுவனமும் தன்னுடைய தொலைபேசிகளில் பல புதிய அம்சங்களைப் புகுத்தி, போட்டியை வலுவானதாக்கியிருக்கிறது. இதிலுள்ள சிறப்பம்சம் என்னவென்றால், ஒவ்வொரு கையடக்கத் தொலைபேசிக் கம்பனிகளும் தங்களுக்கென ஒரு தனிப்பாணியை வைத்திருப்பதுதான். இதன் காரணமாக ஒவ்வொரு கையடக்கத்தொலைபேசிக் கம்பனிகளும் அதியுன்னத இலத்திரனியல் வளர்ச்சியைத் தற்போது காட்டிக்கொண்டிருக்கிறது.

# அந்திராக்ஸ் நோய்



அரிதான சிம்பன்ஷிகள் அந்திராக்ஸ் கிருமிகளால் இறந்திருக்கின்றன.

ஆபிரிக்காவில் இதே போல, தாய்லாந்தின் தேசியப் பூங்காவில், இப்படியான நோயால், இறந்திருக்கின்றன. இந்த நோய்க்கான அறிகுறிகள் எதுவும் கண்டுபிடிக்க முடியாமலிருக்கின்றது.

அந்திராக்ஸ் கிருமிகளை உடனடியாக அறிய முடியாவிட்டாலும், காலப்போக்கில் அதை அறியமுடியும் என வைத்தியர்களால் கூறப்படுகின்றது. இவற்றுக்கும் பக்ரீரியாக்களுக்கும் நிறைய வேறுபாடுகள காணப்படுகின்றது. தோலின் மூலமே அந்திராக்ஸ் கிருமிகள் தொற்றுகின்றன. ஆகவே, தோலை நோய்த் தடுப்புள்ளதாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.




சிம்பன்ஷிகளுக்கு தொற்றியுள்ள இந்த நோய் - மனிதர்களுக்கும் தொற்றலாம் என அஞ்சப்படுகின்றது.

ஐவரிகோஸ்டிலுள்ள பாதுகாப்புப் படையினருக்கு சாடையாக இந்த நோயின் தாக்கம் இருப்பதாக வைத்தியர்கள் கூறுகிறார்கள்.


# வேண்டாம் பழங்கள்

பழங்களைக் கவர்ச்சியாக்குவதற்கும் மற்றும் அளவுக்கதிகமாகப் பெருப்பிப்பதற்கும், பழங்களுக்கு ஊசிமூலம் உரமேற்றப்படுகின்றது. கூடுதலான அப்பிள் பழங்கள் இப்படியான முறையிலேயே வருகின்றன. அண்மையில் 220 இற்கும் மேற்பட்ட பிள்ளைகள் இந்தவகையான பழங்களைச் சாப்பிட்டுப் பாதிப்படைந்திருக்கின்றார்களென ஐரோப்பிய ஆய்வு நிறுவனம் கூறுகின்றது. சாதாரணமாக வீட்டுத் தோட்டங்களில் உருவாக்கப்படுகின்ற பழங்கள் - இப்படியான பாதிப்புக்களைக் குறைவாகவே காட்டுகின்றன. ஆனால், வியாபாரரீதியாக உற்பத்தி செய்யப்படுகின்ற பழங்கள் அதிகம் கவர்ச்சியாக இருக்கும். ஆனால், சத்துக்களைக் குறைவாகவே கொண்டிருக்கின்றன. அண்மையில் செய்யப்படட ஆராய்ச்சிகளின்படி, பழங்கள் மட்டுமல்ல மரக்கறிகளுக்கும் இந்த வகையான சத்துக்கள் கொடுக்கப்பட்டு, அவை விற்பனை செய்யப்படுகின்றன. எமது உடலுக்குத் தீங்கு பயக்கக்கூடிய கார்பென்டேசிம், டிதிக்கார் பமேற்ஸ் மற்றும் பொஸ்மெற் ஆகியன இந்த வகையான வளமாக்கிகளாகும். இவற்றைப் பாவப்பதனால், புதிய புதிய நோய்களுக்கு மக்கள் முகங்கொடுக்க வேண்டியிருக்கின்றது. இதனால், ஐரோப்பிய நாடுகளில் பழங்களின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.



# மிக நுண்ணிய நீர்மூழ்கிக் கப்பல்

உலகின் மிகச் சிறிய நீர்மூழ்கிக் கப்பல் அவுஸ்ரேலிய நாட்டு ஆராய்ச்சியாளர்களினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது 40 சென்ரிமீற்றர் நீளமுடையது. அத்துடன், தானாகவே இயங்கக்கூடிய தன்னிச்சையாக இயங்கும் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கின்றது. இது செரவீனா என அழைக்கப்படுகின்றது. ஏறத்தாழ 5 ஆயிரம் மீற்றர்கள் ஆழத்துக்குச் சென்று, ஆராய்ச்சி செய்யக் கூடியவாறு தயாரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த மிகநுண்ணிய நீர்மூழ்கிக் கப்பல் பிளாஸ்ரிக்கினால் ஆக்கப்பட்டுள்ளது. இதிலே ஐந்து இயக்கத்துக்குரிய மோட்டர்களும், காற்றாடிகளும் காணப்படுகின்றன.



அவுஸ்ரேலியாவின் தேசிய பல்கலைக் கழகத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட இந்த நீர்மூழ்கிக் கப்பலுக்கு ஏறக்குறைய 700 அமெரிக்க டொலர்கள் உற்பத்திச் செலவு ஏற்பட்டிருக்கின்றது. அதேவேளை பற்றரிகளினால் இயங்கும் இந்த நீர்மூழ்கிக் கப்பலின் பற்றரிகளை மீளவும் சார்ஜ் செய்து பாவிக்கமுடியும். இது மிகவும் துல்லியமாகச் சென்று குறிக்கப்பட்ட இலக்கை அடையக்கூடியது. ஆனாலும், இதனுடைய மிகச்சிறிய தன்மையால், பெரிய மீன்களால் விழுங்கப்படக்கூடிய அபாயம் இருக்கின்றது.

# மக்கள் தேவைகளை இனங்காண பிரதேச செயலகங்களுக்கு கடிதம்

## பத்மினி சிதம்பரநாதன் எம்.பி. அனுப்பிவைப்பு

கடந்த கால யுத்தம் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட குடாநாட்டு மக்களின் தேவைகளை இனங்காணும் பொருட்டு, ஒவ்வொரு பிரதேசங்களிலும் இனங்காணப்பட்டுள்ள தேவைகள் மற்றும் தற்போதுள்ள அடிப்படை வசதிகள் தொடர்பான விபரங்களை அனுப்பி வைக்குமாறு, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிரம்பரநாதன் கோரினார்.

இது தொடர்பாக பிரதேச செயலகங்கள், மாநகரசபை மற்றும் பிரதேசசபை, நகரசபை ஆகியவற்றுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

அந்தக் கடிதத்தில் ஒவ்வொரு பிரதேசங்களிலுமுள்ள வீதிப் போக்குவரத்து, மின்சாரம், குடிநீர், கைத்தொழில், மருத்துவம் போன்றவை தொடர்பான விபரங்களையும், இவை தொடர்பான அமைவிடம், நிர்மாணச் செலவுகள் போன்றவற்றினையும் அனுப்பி வைக்குமாறு அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

# கணினிப் பயிற்சி நிலையம் மீண்டும் ஆரம்பித்துவைப்பு

இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தினரின் உதவியுடன் தமிழீழ மாணவர் அமைப்பு தமிழ் தகவல் ஒருங்கமைப்பும் ஒருங்கிணைந்து புதுக்குடியிருப்பு கணினி பயிற்சி நிலையத்தை புனரமைப்பு செய்து மீண்டும் இயங்க வைக்கும் விழா, கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தமிழீழ மாணவர் அமைப்பின் நிர்வாகப் பொறுப்பாளர் முருகு பாரிமகன் தலைமையில் நடைபெற்றது.

மங்கல விளக்கினை மூன்று மாவீரர்களின் சகோதரி யோகலட்சுமி, சோதியா படையணி போராளி வித்தியாபதி, ஆசிரியர்களான - யோகேஸ்வரன், உமாசங்கர், தொழிற் சங்கப் பொறுப்பாளர் பிறையாளன் ஆகியோர் ஏற்றினர்.

முல்லை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் தேசியக் கொடியை ஏற்றினார். கணினி நிலையப் பெயர்ப்பலகையை வேதவனம் திரைநீக்கம் செய்ய புதிய கணினி கட்டடத் தொகுதியை மருத்துவத்துறையைச் சேர்ந்த மனோஜ் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இதைத் தொடர்ந்து கணினிப் பயிற்சியை நிறைவுசெய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

### கரவெட்டி பிரதேச செயலராக சத்தியசீலன் நியமனம்

கரவெட்டி பிரதேச செயலராக சி.சத்தியசீலன் கடந்த 1 ஆம் திகதி முதல் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் முன்னர் இந்தப் பிரதேச செயலகத்தின் உதவிச் செயலாளராக பணிபுரிந்ததோடு, வவுனியாப் பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலராக 6 வருடங்களும், பிரதேச செயலராக 2 வருடங்களும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாரிய நெருக்கடியைத் தவிர்க்க

# இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும்!

## —— விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவிப்பு

நாட்டில் பாரிய நெருக்கடி நிலையைத் தவிர்க்க வேண்டுமானால் விடுதலைப்புலிகளுடன் இடைக்கால நிர்வாகம் குறித்து அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியது அவசியம் என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

அரசாங்கம் இடைக்கால நிர்வாகம் குறித்து பேச்சு நடத்தாமல் போனால் அது நாட்டை பல வழிகளிலும் பாதிக்கக் கூடும். கருணாவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பிரச்சினை தீர்க்கப்படாது போனால் தென்னிலங்கையின் இயல்பை அது பாரிய அளவில் பாதிக்கும், சமாதானம் இன்று நாட்டிற்கு அவசியமானது.

அதற்கு எதிராக ஜே.வி.பி செயற்படுவதானது அதன் அரசியல் முதிர்ச்சியின்மையை காட்டுகிறது. வடக்கு - கிழக்கு மக்கள் தமது நிர்வாகத்தை நிர்ணயித்துக் கொள்வதில் எந்தவித தவறும் இல்லை.

எனவேதான் தமிழர்களின் சுயநிர்ணய போராட்டத்திற்கு என்றும் ஆதரவளிப்பதாக விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இந்தக் கருத்துக்களை முன்வைத்தார்.

# மணல்திட்டில் தவித்த ஒன்பது அகதிகள் மீட்பு!

தலைமன்னார் கடற்பகுதியிலுள்ள மணற்திட்டில் இறக்கிவிடப்பட்ட நிலையில் ஒன்பது அகதிகள் மீனவர்களால் மீட்கப்பட்டனர்.

இந்தச்சம்வம் தொடர்பாக தெரியவருவதாவது -

தமிழ் நாட்டிலுள்ள அகதிமுகாமில் தங்கியிருந்த இவர்கள் - இந்திய மீனவர்களுக்கு பணத்தைச் செலுத்தி, கடந்த வியாழக்கிழமை காலை தமது பயணத்தை ஆரம்பித்தனர்.

இவ்வாறு அவர்கள் வந்துகொண்டிருக்கையில், வியாழன் இரவு தலைமன்னாருக்கு அருகிலுள்ள கடலில் காணப்பட்ட சிறிய மணற்திட்டி ஒன்றில், வலுக்கட்டாயமாக இந்திய மீன்பிடிப்படகிலிருந்தவர்களை, இறக்கிவிட்டுத் தப்பிச்சென்று விட்டனர்.

இதன்பின் சுமார் 35 மணித்தியாலங்களாக அந்த மணற்திட்டியில் எவ்வித உணவோ, நீரோ இல்லாமல் தவித்த இவர்களை கடற்படையினர் அனுமதியுடன் சென்ற மன்னார் மீனவர்கள் - நேற்றுமுன்தினம் பகல் 11 மணியளவில் மீட்டு கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

கடற்படையினர் இவர்களை விசாரணை செய்தபின்னர், தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பொலிஸார் அவர்களை மன்னார் நீதிமன்றில் ஆஜர் செய்தவேளை, அனைவரையும் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

### நினைவுவிழா கொண்டாட்டத்திற்கு ஏனைய கட்சிகளுக்கும் அழைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 53 ஆவது ஆண்டு பூர்த்தி விழாக் கொண்டாட்டங்களில் பங்குபற்றுமாறு ஐக்கிய தேசியக் கட்சி உட்பட, நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுவதற்கு அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 53 ஆவது நிறைவு விழாவை செப்ரெம்பர் மாதம் 4 ஆம்திகதி காலியில் நடத்துவது என, கடந்தவாரம் நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், மைதிரிபால சிறிசேன தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

# உடுவில் கோட்டமட்ட பாடசாலைகளின் ஆங்கில தின போட்டி முடிவுகள்

உடுவில் கோட்ட மட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் முறையே முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றவர்கள், வலய மட்ட ஆங்கிலதினப் போட்டிகளில் பங்குபற்ற முடியுமமென கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

**பேச்சு**

**தரம் - 3** : எம்.ஹம்சானந்தி (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ் தனுஷா (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ். தனுஜிகா (ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை)

**தரம் - 4** : எஸ்.டிலன்சிகா (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ். அச்சுதன் (உடுவில் மகளிர் கல்லூரி), எம்மதுசா (இராமநாதன கல்லூரி), கே.தீபிகா (இணுவில் மத்திய கல்லூரி), எஸ். தாஷ்ஷாயினி (ஏழாலை தெற்கு அ.மி.த.க பாடசாலை)

**தரம் - 5** : எல்.பவதினி (உடுவல் மகளிர் கல்லூரி), எஸ்.பிரதக்ஷணா (உடுவில் மகளிர் கல்லூரி), கே.கம்ஸானந்தி (இணுவில் இந்துக் கல்லூரி).

**தரம் - 6** : எஸ்.சாம்பவி (உடுவல் மகளிர் கல்லூரி), ரி.டிலுக்சி (உடுவில் மகளிர் கல்லூரி), ரி.கௌஷியா (இராமநாதன் பாடசாலை).

**தரம் 7** : ரி.கிறிஸ்ரினா (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ்.சாந்தி (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ்.சக்திபாலன் (கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரி).

**தரம் 8** : ஜே.ஜோய் ஜெறிற்ரா (உடுவில் மகளிர் கல்லூரி), எம்தனஜா (உடுவில் மகளிர் கல்லூரி), ஜெடென்சிகா (உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்).

**தரம் 9** : உ.சஹானா (உடுவில் மகளிர் கல்லூரி), ஜெ.துளசிகா (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), ரி.லின்டா (உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம் 10** : எஸ்.தமிழினி (உடுவில் மகளிர் கல்லூரி), ஆர்.சிவன்யாழினி (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ்.அஜிததா (இராமநாதன் கல்லூரி).

**தரம் 11** : என். மயூரி (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ்.வேணுஜா (இராமநாதன் கல்லூரி), பி.யோர்டனா (உடுவில் மகளிர் கல்லூரி).

**பார்த்தெழுதல்**

**தரம் 3** : ஆர்.நிஷானா (உடுவில் மகளிர் கல்லூரி), ரி.பிரசாத் (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை), கே.மதுரகா (சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை).

**தரம் 4**: எஸ்.சிவகாசிகா (உடுவில் மகளிர் கல்லூரி), பி.கிரிஜா (சுனாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை), கே.இந்துஜா (இணுவில் மத்திய கல்லூரி).

**தரம் 5** : ஆர்.பிரியங்கா (ஏழாலை மகாவித்தியாலயம்), எஸ்.சங்கீர்த்தனா (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை), எஸ்.கோகுலவர்த்தனி (இணுவில் மத்திய கல்லூரி).

**தரம் 6** : ஆர்.நிலானி (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ்.தட்ஷாயினி (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), ரி.சரண்யா (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

**தரம் 7** : கே.பிரியங்கா (உடுவில் மகளிர் கல்லூரி), என்.சங்கீதா (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), பி.அஞ்சனா (உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம் - 08** : பி.லக்ஸி (உடுவில் மகளிர் கல்லூரி), எம்.மொபிக்கா (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ்சக்திதாஜினி (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி).

**தரம் - 09** : ரி.டிலானி (உடுவில் மகளிர் கல்லூரி), என்.விதுஷா (இணுவில் மத்திய கல்லூரி), கே.நிஷாந் (ஸ்கந்தவரோதயாக் கலலூரி).

**தரம் - 10** : ஏ.அபிதா (உடுவில் மகளிர் கல்லூரி), ரி.அகல்யா (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) வி.இமாஜினி (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி).

**தரம் - 11** : எஸ். தக்ஷீலா (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), ஜி.ராகுலவரணி (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ்.டல்றீன் (உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம் - 12** எஸ்.சிவானிஷா (உடுவில் மகளிர் கல்லூரி), வி.மீறா (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) எஸ்.ஆர்த்திகா (உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம் - 13** கே.பகீரத் (ஸ்கந்தவரேதயாக் கல்லூரி), ரி.தர்ஷினி ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) கே.வசீகரி (உடுவில் மகளிர் கல்லூரி).

**சொல்வளம்**

**தரம் - 6** : எம்.சரண்ஜா (உடுவில் மகளிர் கல்லூரி), ஆர்.நீதன் (இணுவி.ல் இந்துக் கல்லூரி), எஸ்.ஆரணி (உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம் - 7** ஏ.ஜெயப்பிரகாஷ் (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), ரி.கிறிஸ்ரின் (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ்.அனிதா (உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம் - 8** : ஆர்.விதுஜா -(உடுவில் மகளிர் காவ்லூரி), எஸ்.சக்திதாஜினி (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), டி.லக்சி (உடுவில் மகளிர் கல்லூரி), சி.மாதுமை (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி).

**தரம் - 09** : ஆர்.தனுஜா (உடுவில் மகளிர் கல்லூரி), ரி.வைஷணா (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), உ.சகானா (உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம் 10** : பா.லக்சனா (இணுவில் இந்துக் கல்லூரி), எ.சர் மிகா (இராமநாதன் பாடசாலை), எஸ்துசாந்தி (இராமநாதன் பாடசாலை), கே.கீதினி (உடுவில் மகளிர் கல்லூரி), என்.சரணயா (உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம் -11** : பா.கல்பனா (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ்.ஜனகா (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), எஸ்.வேணுஜா (இராமநாதன் பாடசாலை).

தரம் 12 : ரி.அடிலா (உடுவில் மகளிர் கல்லூரி), ரி.காயத்திரி (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ்.லகிதா (இணுவில் இந்துக் கல்லூரி) எஸ்.சுவிதா (இணுவில் இந்துக் கல்லூரி), ஜே.காயத்திரி (இணுவில் இந்துக் கல்லூரி).

தரம் 13 : கே.கயந்தா (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ்.கர்சினி (உடுவில் மகளிர் கல்லூரி), என்.வசுகி (இராமநாதன் பாடசாலை).

**கட்டுரை வரைதல்**

**தரம் - 6** ஆர்.நீதன் - (இணுவில் இந்துக் கல்லூரி), எஸ்.தக்சாயினி (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), பா.லக்சி (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி).

**தரம் - 7** : எஸ்.சாந்தி (உடுவில் மகளிர் கல்லூரி), ஆர்.சக்தியா (உடுவில் மகளிர் கல்லூரி), வி.சுகன்யா (இணுவில் இந்துக் கல்லூரி).

**தரம் - 8** : எஸ்.மாதுமை (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), ஆர்.விதுஜா (உடுவில் மகளிர் கல்லூரி), பி.சாலினி - (உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம் - 9** : ரி.வைஷணா (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), ஆர்.தனுஜா - (உடுவில் மகளிர் கல்லூரி), ரி.டிலானி - (உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம் - 10** : ஏ.ரேகா - (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), எம். திவ்யா (இணுவில் இந்துக் கல்லூரி), எஸ்.சாம்பவி (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை),

**தரம் - 11** : பி.ஜோர்டனா (உடுவில் மகளிர் கல்லூரி, )ஆர்.நீரஜா (இராமநாதன் கல்லூரி), ஆர்.கிருஷ்ணராஜ் (இணுவில் இந்துக் கல்லூரி).

**தரம் - 12** : ரி.அடிலா (உடுவில் மகளிர் கல்லூரி), பா.சாதனா[illegible] (இணுவில் இந்துக் கல்லூரி), அ.ரியோபிலா (உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம் - 13** : க.கலையரசி (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), பா.கார்த்திகா (உடுவில் மகளிர் கல்லூரி), பா.சிந்துஜா (உடுவில் மகளிர் கல்லூரி).

**முன் ஏற்பாடற்ற பேச்சு**

**தரம் - 13** : கே.கலையரசி (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), என்.ஆதவன் (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி),

**முன் ஏற்பாட்டுப் பேச்சு**

**தரம் - 12** : எஸ்.தருணி (உடுவில் மகளிர் கல்லூரி), ரி.ஜெனனி (உடுவில் மகளிர் கல்லூரி),

**தரம் - 13** : என். மேனகா (உடுவல் மகளிர் கல்லூரி), ஐ.சுகன்ஜா (உடுவில் மகளிர் கல்லூரி).

**குழுப்பாட்டு**

**ஆரம்பப் பிரிவு**

**முதலாம் இடம** - (உடுவில் மகளிர் கல்லூரி).

**இரண்டாம் இடம் -** (உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்), மூன்றாம் இடம் - (சுன்னாகம் றோ.க.த.க பாடசாலை).

**கீழ்ப்பிரிவு**

**முதலாம் இடம்** - (மயிலணி சைவ மகாவித்தியாலயம்), இரண்டாம் இடம்.

**மத்திய பிரிவு**

**முதலாம் இடம்** - (உடுவில் மகளிர் கல்லூரி).

**இரண்டாம் இடம்** - (மயிலணி சைவ மகாவித்தியாலயம்).

**மேற்பிரிவு**

**முதலாம் இடம்** - (உடுவில் மகளிர் கல்லூரி).

**குழு நாடகம்**

ஆரம்பப் பிரிவு, கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு - அனைத்திலும் (உடுவில் மகளிர் கல்லூரி) மட்டுமே முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

(101)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு*
*கொள்ளாத கொள்ளாது உலகு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சிந்திக்க வேண்டிய தருணம்

யாழ். குடாநாடு தனக்கேயுரிய தனித்துவமானதும், சகல ராலும் மதிக்கப்படுவதுமான கலாசார பண்பாட்டு பாரம்பரிய மிக்க விழுமியங்களை படிப்படியாக இழந்து வருகின்றதா? என்ற அச்சமிகு சந்தேகம் இப்போது சமூகப் பொறுப்புடன் சிந்திக்கும் தமிழ் மக்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றமையானது கவலை தரும் விடயமாகியுள்ளது.

ஒரு காலத்தில் குடாநாட்டு மக்களின் மரபாக விளங்கிய தமிழ கலாசார மேன்மைமிகு பழக்க வழக்கங்களும், மனிதப் பண்பாடுகளும், சர்வதேச சமூகத்தின் மதிப்புக்கும், கௌரவத்திற்கும் உரியதாகவும், ஒரு அறிவு முதிர்ச்சி மிக்க சமூகத்தின் அடையாளமாகவும் கருதப்பட்டது.

நல்ல தமிழ் என்றால் யாழ்ப்பாணத்தமிழ், நல்ல கலாசார மென றால் கந்தபுராண கலாசாரத்தைப் பேணிவரும் யாழ்ப்பாண மக்களின் கலாசாரம், நல்ல பண்பாடு எனில், யாழ். மக்களின் தமிழர் சால்பை உறுதிப்படுத்தும் பண்பாடுதான் என்ற கீர்த்தி மிகு பெருமைக்குரியவர்களாக குடாநாட்டு மக்கள் தம்மை இனம்காட்டிக் கொண்டிருந்த காலம் ஒன்று இருக்கவே செய்தது.

தமிழ் மொழியுணர்வும், இனவுணர்வும், தமிழர் மீது கட்ட விழ்த்துவிட்ட சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறை அரசியல் நடவடிக்கைகளுக்கெதிராக தமிழ் மக்களைக் கிழர்ந்தெழ வைத்தபோது தமிழர் தம் விடுதலை வேட்கை உலகிற்கு உணர்த்தப்பட்டது. அப்போது தமிழ் மக்களின் வீரம் செறிந்த - பேரினவாத அரசுக்கு எதிரான யுத்தம் மூலம் புதிய புறநானூற்று வரலாற்றை எழுத முதலடியெடுத்துக் கொடுத்ததும் யாழ். குடா நாட்டு மண்ணின் வீர உணர்வு தான்.

இவையெல்லாம் வெறுமனே சரித்திர கால நிகழ்வுகளாக மாறி விடுமோ என்ற மனக் கலக்கத்துடன் கூடிய பீதியை சமகால நிகழ்வுகள் சில உருவாக்கி வருகின்றன.

ஒரு இனத்தின் கௌரவமிக்க தனித்துவமென்பதன் மூலாதாரம் அந்த இனத்தின் மனித நேயப் பண்புகளின் அடித்தளத்தையே ஆதாரமாகக் கொண்டதெனலாம். மனித நேயத்தைப் புறக்கணிக்கும் இனம் எப்போதுமே ஒரு மந்த புத்த யுள்ள இனமாகவே இருக்கும்.

ஆனால், இயல்பிலேயே அறிவு பூர்வமாக சிந்தித்து செயற் படும் திறன் கொண்ட இனம் மந்த புத்தியுள்ளதாக மாறுகின்ற தென்றால், அதனைவிடத் துயரம்தரும் விடயம் வேறில்லை.

குறைபாடுகள் இல்லாத கலாசார பூரணத்துவமிக்க இன மென எந்த இனத்தையும் இன்று விரல் சுட்டிக் காட்ட முடியாது என்பது உண்மைதான். ஆனாலும், தமிழினம் நிறைபாடுகள் நிறைந்த இனமாகவே அறியப்பட்ட ஒன்றாகவும், ஏனைய மானிட சமூகத்தவர்க்கெல்லாம் வழிகாட்டக் கூடிய பண் பாட்டுப் பெருமைகளைக் கொண்டதாக விளங்கிவிட்டு, திடீரென ஒரு குறுகிய காலப் பகுதிக்குள் தனது செழுமைமிகு மனிதாபிமான, அறிவுசார் பண்புகளை இழந்து வந்துள்ளமையானது வேதனைதரும் செய்தியாகியுள்ளது.

1995 இன் இறுதியில் ஏற்பட்ட வரலாற்றுத்துயர்மிக்க இடப் பெயர்வின் போது தமது வாழ்வியல் வேர்களை தமது தாயக மண்ணின் உயிர்நிலைவிட்டு வேகமாகப் பிடுங்கிக் கொண்டு வன்னிப பெருநிலப்பரப்பை நோக்கி உயிர்காப்பு நகர்வை மேற்கொண்ட போது, குடாநாடு அனாதையாகி வெறுமையானது என்பது உண்மைதான்.

ஆனாலும், சமாதான சூழலில் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும குடாநாடு நோக்கி குதூகலமாக வந்தபோது - அவர்களின் வேர்நிலப பூமியானது அதன் பொலிவையும், பூரிப்பையும் மட்டுமல்ல அதன ஆதார சுருதியான தமிழ்த்துவ ஆன்மாவையும் இழந்த வெறு மியாக இருப்பதைக் காணநேர்ந்தபோது ஏற்பட்ட துயரம் அளப்பரியதாகும்.

அந்த ஏழாண்டுப் பிரிவு காலத்தில் இந்த மண்ணில் இருந்த எமது மக்களுக்கு என்ன நடந்தது?

இருண்ட போர்க்காலத்துள் பொருளாதாரத்தடை, இராணுவ அச்சம், பதுங்குகுழி வாழ்க்கை இவற்றுக்குள்ளும் நாம் பேணிபாது காத்த நமது 'மனிதம்' எங்கே தொலைந்து போயிற்று? ஏன் தொலைத்தார்கள்? அல்லது யார் அதனை அவர்களிடமிருந்து பிடுங்கிக் கொண்டார்கள்?

சக மனிதனை மனிதனாக மதிக்கும் நமது பண்பு இப்போது அருகி வரக் காரணமென்ன?

சமூக உறவுகள், குடும்ப உறவுகள் சிதிலமாகி வரக்காரண மென்ன? மாணவர்கள் மத்தியில் கலாசாரச் சீரழிவுகள் வேகமாகப் பரவுவதற்கு வழிவகுத்தவை எவை?

கல்வி சார் சமூகம் தனது கௌரவத்தை இழந்து வரக்காரணம யாது?

பொருளாதார வளர்ச்சி அதிகரித்துக் காணப்பட்டாலும், மனிதத்துவ வளர்ச்சி குன்றி வருகிறதே இதன் அடிப்படை என்ன?

முதுமை அவமதிக்கப்படுகிறது, பெற்றோர்கள் நம்பிக்கை தளர்ந்து வருகிறார்கள், இளைஞர்கள் மத்தியில் மனித உணர்வு குறைந்து வருகின்றது. ஏதோ ஒரு வகையான விரக்த உணர்வும் அவர்களிடையே பரவிவர, அவர்கள் உளவியல் ரீதியில் ஏதோ வகையில் பாதிக்கப்பட்டவர்களாக நடந்து கொள வது ஏன்? போதையில் பொழுதைக்கழிக்க அவர்களை நிர்ப் பந்திப்பது எது?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை தேடுவது மட்டு மல்ல, இவற்றுக்கெல்லாம் நிவாரணம் தேடுவதும் மிக மிக அவசிய மானதொன்றாகியுள்ளது.


விடுதலைக்காகப் போராடி அளப்பரிய தியாகங்களைப் புரிந்து, தனது இனத்தின் பெருமையை எல்லாவகையிலும் சர்வதேசம் உணரவைத்திருக்கும் தமிழரின் வீரமும், விவேகமும் எதிர்கொள்ளும் சவாலாகவும் இதுவுள்ளது.

குடாநாட்டு மக்களின் - மாணவரின் - இளைஞரின் - 'மனிதம்' பாதுகாக்கப்படவேண்டும். இது ஒரு வரலாற் றுக்கடமையுடன் கூடிய அவசியமாகியுள்ளது.

இல்லையேல் நாம் வென்றெடுக்கப் போகும் விடுதலை அர்த்த மற்றதாகிவிடும் என்ற அச்சம் நம்மை என்னவோ செய்கிறது.

நமக்குள் ஏதோ தீய சக்தி திட்டமிட்ட முறையில் ஊடுருவி நமது கலாசாரத்தை - பண்பாட்டை சிதைக்கிறது என்பது உண்மை. அதனை உடனடியாக இனங்கண்டு பூண்டோடு அழிக்க வேண்டியது நமது கடமை.

# நாடும் நடப்பும்




# அரசுடன் ஹெல உறுமய புரிந்துணர்வு ஒப்பந்தம்

## இறுதி தயாரிப்பு பணிகள் நடைபெறுகின்றன

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமும், ஜாதிக ஹெல உறுமயவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவுள்ளதாக ஜாதிகஹெல உறுமயவின் நாடாளு மன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கு நிபந்தனையுடனான ஆதரவை வழங் கும் வகையிலேயே இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச் சாத்திடப்படவுள்ளது. ஒப்பந்தத்தின் இறுதிக் கட்டத் தயாரிப்பு நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவை - அரசாங் கத்துடன் இணைக்கும் முயற்சிகளில் அமைச்சர்களான மங்கள சமரவீர, ஜெயராஜ் பெர்னாண்டோபிள்ளே, சரத் அமுனுகம ஆகியோர் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இந்த முயற்சிகள் வெற்றியளிக்கும் பட்சத்தில், புத்த சாசன அமைச்சு மற்றும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவி ஆகிய இரு பொறுப்புக்கள் ஜாதிகஹெல உறுமயவுக்கு வழங்கப்படலாமென அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

தமது இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசின் பக்கத்துக்குச் சென்றமை காரணமாக, அரசாங்கத்துடன் தொடர்ச்சியாக முரண்பட்டு வந்திருந்த ஜாதிகஹெல உறு மய, இந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாக விட்டுக் கொடுப்புடன் செயற்படுமெனவும் நம்பப்படுகிறது.

### மாகாணசபைத் தேர்தல்

## உத்தியோகபூர்வ முடிவுகளில் தவறுகள் கண்டுபிடிப்பு!

கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற மாகாண சபைக்கான தேர்தல் தொடர்பாக, உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களை தேர்தல் திணைக்களம் வெளியிட்டிருக்கின்றது.

இந்தப் புள்ளி விபரங்களுக்கும், தேர்தல் முடிவுகள் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் அலுவலகம் வெளி யிட்டுள்ள உத்தியோகபூர்வ முடிவுகளுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜூலை 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட தேர்தல் முடிவுகளின்படி - மேல்மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் 35 லட்சத்து 41 ஆயிரத்து 34 எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆயினும், இப்போது பதிவுசெய்யப்பட்ட மொத்த வாக்காளர் எண்ணிக்கை 35 லட்சத்து 60 ஆயிரத்து 493 எனத் தெரியவந்துள்ளது. 19 ஆயிரத்து 459 வாக்காளர்கள் விபரம் முன்னைய முடிவில் விடுபட்டிருக்கிறது.

இதுபோன்றே மத்திய மாகாணத்தில் 16 லட்சத்து 50 ஆயிரத்து 568 பதிவான வாக்காளர்கள் இருப்பதாக அறி விக்கப்பட்ட போதும், 21 ஆயிரத்து 144 வாக்காளர்கள் குழுவாக இருப்பது இப்போது தெரிய வந்திருக்கின்றது.

இதுபோன்றே தென்மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் எண்ணிக்கை 23 ஆயிரத்து 204 ஆல் கூட்டி வெளியிடப்பட்டிருந்தது.

வடமத்திய மாகாணத்தில் 18 ஆயிரத்து 763 வாக் காளர்களும், ஊவா மாகாணத்தில் 15 ஆயிரத்து 306 வாக்காளர்களும் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதாக ஜூலை 12 ஆம் திகதித் தேர்தல் முடிவில் வெளியா கியிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

## எம்.பிக்களில் சம்பள உயர்வு ஐ.தே. கட்சி கடும் எதிர்ப்பு!

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊதியத் தொகையை அதிகரிப்பதென்ற அரசாங்கத்தின் முடிவு தொடர்பாக, ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

அரசாங்க ஊழியர்களின் ஊதியத் தொகை 70 வீதத்தால் அதிகரிக்கப்படுமென்ற தேர்தல் வாக்குறுதியை அரசாங்கம் நிறைவேற்றும்வரை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஊதிய அதிகரிப்பைத் தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என ஐக்கிய தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

ஆட்சிக்கு வந்து இரண்டு மாதங்களுள் அரசாங்க ஊழி யர்களுக்கு சம்பள அதிகரிப்புச் செய்வதாக வாக்கு றுதியளித்த அரசாங்கம் இன்னமும் அதனை நிறைவேற்றாத நிலையில்,

ஊதிய அதிகரிப்பு தொடர்பாக, நாடாளுமன்ற உறுப்பி னர்கள் சிலர் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வருவதை தம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாதென ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்க குற்றஞ்சாட்டினார்.

# சந்திரிகா – ஜே.வி.பி. முறுகல்நிலை மேலும் மோசமடைந்து வருகிறது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பிக்கும், ஜனாதிபதி சந்திரி காவுக்கும் இடையிலான முரண்பாடுகள் மேலும் வலுவடை ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடைக்கால நிர்வாகசபை யோசனைகள் குறித்து, பொறுப்பற்ற முறையில் ஜே.வி.பியினர் கருத்து வெளியிட்டு வருவதாக, அண்மையில் இடம்பெற்ற நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் ஜே.வி.பியினருடன் கடுமையாக வாக்கு வாதப்பட்ட ஜனாதிபதி சந்திரிகா - 'அதன் பின்னர், ஆளும் கூட்டணித் தலைமைப் பதவியை இராஜினாமாச் செய்தி ருந்தார்.

அதன் பின்னரும், இடைக்கால நிர்வாக யோசனைகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேசப்போவதில்லை என ஜனாதிபதி தமக்கு உறுதியளித்திருப்பதாக, ஜனாதிபதியைச் சீண்டும் வகையில் ஜே.வி.பியினர் மக்கள் மத்தியில் கருத்துக்களைப் பரப்பி வருவதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இந்தநிலையில், ஜே.வி.பியினர் வசமிருக்கும் விவசாய அமைச்சினால் - அம்பாந்தோட்டையில் மேற்கொள் ளப்படவிருக்கும் குளங்களைப் புனரமைக்கும் விசேட ஆரம்ப நிகழ்ச்சியில் ஜனாதிபதி கலந்துகொள்ளாததன் மூலம், தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் டி.எம்.ஜயரட்ண, அண்மையில் ஜனாதி பதிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் முறுகல் வலுத்து வருவதைச் சுட்டிக்காட்டியமை இங்கு குறிப்பிடத்தக் கது.

செய்திக்கட்டுரை - கண்ணன்

# மண்டைதீவு உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் மக்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் பிரச்சினைகள்

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வைக்குள்ளே அடைக்கப்பட்ட மக்கள் வாழும் தீவாகிய மண்டைதீவுப் பகுதிக்கு செல்ல வேண்டும் என்ற நீண்ட நாள் ஆசை ஒன்று அண்மையில் நிறைவேறியது.

மினிபஸ் தரிப்பிடம் சென்று அங்கே மண்டைதீவுக்கு புறப்பட இருந்த மினிபஸ்சில் இருந்தவர்களிடம், தீவிலே ஒருவரையும் தெரியாத நான் அங்கு வரலாமா, எனக் கேட்ட போது, "இல்லைத்தம்பி யாரையாவது தெரிந்தால், அவர்களின் விலாசம் கொடுத்துவிட்டு தற்காலிக பாஸ் எடுத்துப் போகவேண்டும்" என்றார் ஒரு அம்மா. "அப்படியானால் நீங்கள் யாராவது விலாசம் தந்தால் நான் உங்களுடன் வந்து விடுகிறேன்" என்றதும், ஐயா ஒருவர் இருந்து "தம்பி உம்மை ஆரன்று தெரியாது நாங்கள் எப்படி கூட்டிக் கொண்டுபோறது. பேப்பர் காரன்களெண்டு சொன்னியளெண்டா உள்ளுக்கு விடமாட்டாங்க" என்றார்.

அப்போது தான் திடீரென பஸ் சாரதி "தம்பி எதுக்கும் துணிவு வேணும் - தீவைப்பார்க்கப் போவதாக நேவிக்கு சொல்லும்" என்றார். நானும் சரி என ஏறிக்கொள்ள யாழ். நகரைவிட்டு பஸ் மாலை 4.15 மணிக்கு உருளத் தொடங்கியது.

மண்டைதீவின் நுழைவாயிலில் உள்ள தடைக்கேற்றைத் தாண்டி சற்று நேரத்தில் ஒரு காவலரண் அருகே மினிபஸ் நின்றது. அதிலே இறங்கி சகலரும் பதிவுகளை மேற்கொண்டு கடற்படையினரின் கடற்கலம் பொறிக்கப்பட்ட தற்காலிக பாஸ் ஒன்றை பெற்று, தமது அடையாள அட்டையினை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு பயணம் தொடர்ந்தது.

மக்கள் நடமாட்டமற்ற நீண்ட பாதையூடாக பயணம் தொடர அங்கே தாக்குதலால் சிதறுண்டு போன வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் கோழித்தீன் தயாரிக்கும் ஆலை முதலிலே யுத்த வடுவினை ஆரம்பித்துவைத்தது. குன்றுகளும், குழிகளும் நிறைந்த பாதையூடாகவும், புதர்களும், பற்றையும் நிறைந்த பாதையூடாகவும் பயணிகள் வாகனம் குலுங்கிக் குலுங்கித் தன் பயணத்தை தொடர்ந்தது.

அங்கே கடற்படையினரின் பாரிய முகாமுக்குள் முடக்கப்பட்டுள்ள வீடுகளின் உரிமைக்கார குடும்பங்கள், பேதுருவானவர் ஆலயத்தின் தென் பகுதியில் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் அமைக்கப்பட்ட குடியிருப்புக்களிலே அகதி வாழ்க்கையை வாழும் குடியிருப்பு ஊடாகவும் பஸ் பயணம் தொடர்ந்து செல்கிறது.

அக்குடியிருப்பினை அண்டிய பகுதியிலே கடற்படையினர் சந்தோஷமாக தங்கள் மாலைப் பொழுதைக் கழிக்க கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தனர். அக்குடியிருப்பில் இறங்கி மக்களை சந்திக்க வேண்டும் என்ற ஆவல். ஆனால், நேரம் மாலை ஆகிவிட்டது. நானும் எனது தற்காலிக பாஸை திருப்ப வேண்டும். அது மட்டுமன்றி முதற்தடவை பயணம் என்பதால் அத்தீவு மக்கள் எவரும் எனக்கு பழக்கமற்றவற்றவர்களாகவும் இருந்தனர்.

தொடர்ந்து சென்று மண்டைதீவு பிள்ளையார் ஆலய முன்றலில் பஸ் தரித்தது. அப்போது நேரம் மாலை 5.00 மணி. மாலை 5.15 க்கு அங்கிருந்து கடைசி பஸ் யாழ்ப்பாணம் செல்லவுள்ளதாக அறிந்தேன். அந்த 15 நிமிடத்தில் மக்களின் சில பிரச்சினைகள் தேவைகள் பற்றி அறியவென ஆலய வளாகத்தில் நின்றோர், ஆலய வீதியால் சென்றோர் சிலரிடம் என்னையும் யாரென அறிமுகப்படுத்திவிட்டு அவர்களின் துயரங்களை அறிந்து கொண்டேன. அந்த மக்கள் தங்களது பெயர்களை தெரிவிக்க தயங்கியதன் மூலம் அவர்கள் வாழும் சூழல் யதார்த்தத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

மக்கள் மனதில் இருந்து குமுறும் வேதனைகளில் அந்த 15 நிமிடத்தில் பதிவானவை.




## மருத்துவ சேவை

பல இன்னல்களால் இடம்பெயர்ந்த மீளக்குடியமர்ந்த தங்கள் இயல்பு வாழ்க்கையை ஆரம்பிக்க வந்தவர்களுக்கு, தங்கள் மருத்துவ சேவையை பூர்த்திசெய்ய யாழ்.நகரம் செல்ல வேண்டும். மண்டைதீவிற்கென ஒவ்வொரு மாதமும் நடுப்பகுதியில் வைத்தியர் வந்து பிள்ளையார் கோவிலடியில் உள்ள ஒரு இடத்திலே வைத்து மருத்துவ சேவை வழங்கப்படுவதாகவும், அதுவும் சீரின்றியே உள்ளதாகவும் வேதனையுடன் தெரிவித்தனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் "பிரசவ வலியால் தவித்த தாயொருவரை வைத்திய வசதியற்ற மண்டைதீவில் இருந்து மோட்டார் சைக்கிளில் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றபோது, பண்ணைப் பாலத்தருகிலே பிரசவ வலி மேலோங்கி அங்கேயே குழந்தையை பிரசவிக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை" ஏற்பட்டது. இதுவே போதும் வைத்திய தேவையினை மக்கள் எந்தளவு எதிர்பார்த்து நிற்கின்றார்கள் என்பதற்கு,

## கடற்தொழில்

பெரும்பாலானவர்கள் தற்போது கடற்தொழிலில் ஈடுபட்டுவருவதனால், அவர்கள் மீது திணிக்கப்பட்ட சில நடைமுறைகள் நீக்கப்படவேண்டும் என்ற ஆதங்கம் வெளிப்பட்டது.

தற்போது பகலிலே தொழிலுக்கு போகும் படகுகள் மாலை 6.30 மணிக்குள்ளே கரைக்கு திரும்ப வேண்டும். தவறினால் மறுநாள் அதிகாலை 5.00 மணிக்கே தீவினுள் நுழைய முடியும். அதேவேளை அதிகாலை 3.00 மணிக்கே தீவைவிட்டு வெளியேறி கடலுக்கு செல்லவும் ஒழுங்குகள் உள்ளன.

இதேவேளை எந்தப் பகுதியில் இருந்தாலும் கடலிலே இறங்கித் தொழில் செய்யவும், மீண்டும் திரும்பி வரவும் ஒரு வழியினையே பயன்படுத்தவேண்டும் என்பது ஒரு கட்டாய நடைமுறையாகவுள்ளது.

அத்துடன் தீவினுள் நிரந்தரமாக வசிப்பதற்கென கடற்படையினரால் வழங்கப்பட்டுள்ள "பாஸ்"இனை, தொழிலுக்கு செல்லும் போது காவலரணிலே கொடுத்துவிட்டு "கடற்பாஸ்"இனை பெற்ற பின்பே கடலில் இறங்கவேண்டும். இத்தனை துன்பங்கள் மத்தியில் தான் தங்கள் கடற்தொழில் சீவியம் செல்வதாக ஆதங்கம்.

## போக்குவரத்து

வடபிராந்திய போக்குவரத்து சபையினர் யாழ்.நகரில் இருந்து இரு சேவைகளை, ஒரு நாளுக்கு மேற்கொள்கின்றனர். யாழ்.நகரில் இருந்து காலை 9.00 மணிக்கும், மாலை 4.00 மணிக்கும், மண்டைதீவில் இருந்து பகல் 10.00 மணிக்கும், மாலை 5.15 மணிக்கும் சேவையினை மேற்கொள்கின்றது. ஏனைய நேரங்களில் தனியார் மினிபஸ்களே சேவை செய்கின்றன. அதிலும் மினிபஸ்சில் சுமார் 10 பேராவது ஒரு தடவையில் இருக்கவேண்டும், ஆட்கள் சேரும் வரை காத்திருந்தே புறப்படும்.

ஓரளவுக்கு தங்களது போக்குவரத்து தேவையை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக உள்ளதாக மக்கள் மத்தியில் தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை வீதிகளின் நிலை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. பேருந்து செல்லும் பாதை மட்டும் திருத்தப்பட்டுள்ள போதும். மக்கள் குடியிருப்புக்கள் ஊடாக செல்லும் பாதைகள் மிகவும் மோசமாக சேதமடைந்து சுமூகமான போக்குவரத்து பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர்.

## நிர்வாகம்

கிராம அலுவலர்கள் இருவர் உள்ளபோதும் அவர்கள் வேறு பிரதேசங்களில் இருந்து வந்தே கடமையாற்றுவதாகவும், அவர்களது அலுவலக நாட்களில் மட்டும் வந்து செல்வதுடன், சில சமயங்களில் சந்திக்க முடியாத நிலை ஏற்படுவதாகவும், ஆதங்கப்பட்ட மக்கள், கிராம அலுவலர்களது அலுவலக நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் ஏதாவது தேவைகளை, பூர்த்தி செய்ய வேண்டுமானால், கிராம அலுவலர்கள் சொந்த இடங்களுக்குச் சென்றே நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் தெரிவித்தனர்.

## பொதுவானவை

கடற்படையினரது "பாஸ்" நடைமுறையில் தீவிலே உள்ள ஆலயங்களில் பூஜை செய்யும் பூசகரும் கூட தப்பவில்லை. வெளியிடமொன்றில் இருந்து காலை வரும் அவர் தனது அடையாள அட்டையைக் கொடுத்து "தற்காலிக பாஸ்" இனை பெற்று மீண்டும் மாலையில் வீடு திரும்பும் போது, அதை மாற்றிச் செல்லும் நிலை.

அத்துடன் தீவினுள் கையடக்கத் தொலைபேசியோ, கமராக்களோ வைத்திருக்கவோ, கொண்டு செல்லவோ முடியாத நிலையும் திணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எல்லாவற்றுக்கும் மேலாக மக்கள் மனதிலே பெரியதொரு ஆதங்கம் குடிகொண்டுள்ளமை இங்கே அவசியம் குறிப்பிடவேண்டும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் அரசியல் பணியினை மேற்கொள்ளவென குடாநாட்டிலும், தீவகங்களிலும் கிளை பரப்பியுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் தீவிலே அரசியல் பணியினை ஆரம்பிக்க கடற்படை எதிர்த்து வருகின்றது என்றும்,

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் சாதனை படைத்தவர்கள் தினங்கள், நினைவு நாட்கள் போன்றவற்றை அனுஷ்டிக்க முடியாததாகவுள்ளதாகவும், அந்தத் தினங்களில் ஒரு எழுச்சிக் கொடியைக் கூட கட்டமுடியாத நிலை உள்ளதாகவும் பெரும் மனவேதனையுடன் தெரிவித்தமை இங்கே சுட்டிக் காட்டத்தக்கதாகும். □

---

இங்கிருந்து எங்கே...

## மாறிவரும் மனப்பாங்குகள்

இன்றைய வாழ்வின் எந்தத்துறையினை எடுத்துக் கொண்டாலும் - ஒரு பொதுப்படையான நோக்கில் அணுகும் போது - ஒரு அதிருப்தி - போதாமை - எங்கேயோ - எதிலேயோ ஒரு குறை இருப்பது போன்ற ஒரு உணர்வு.

கல்வி, சமூகம், சமயம், குடும்பம் எதுவும் இதற்கு விலக்காகத் தெரியவில்லை.

ஏன் இவ்விதம் ஆனது?

மாறிவரும் மனித மனப்பாங்கு இதற்கான காரணமாக ஆயிற்றோ?

நல்லதற்கோ கெட்டதற்கோ வாழ்வின் நிலைமைகள் முன்னை விடப் பரவாயில்லை என ஆகிக்கொண்டு வருகிற சூழலில் வசதிகள் வாய்ப்புகள் அதிகரித்தும் அகலித்தும் வருகையில் திருப்தியாய் அமைந்து விளங்க வேண்டிய பல விடயங்கள் சங்கடம் தருகிற அளவுக்கு கவலைக்கிடமாய் ஆகிப்போயிருப்பது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம்.

ஒரு காலத்தில் குப்பி விளக்கு வெளிச்சத்தில் கவனமாகப் படித்து சிறப்பாகப் பெறுபேறுகளை ஈட்டிய பிள்ளைகள் மின்சாரம் மற்றும் இன்னோரன்ன வசதிகள் கிடைத்திருக்கிற சூழலில் கல்வித்தரம் குன்றி படிப்பில் அக்கறையற்று வேறு கவனக்கலைப்பான்களுக்கு இரையாகிப் பாழாகிக் கொண்டு போகிறார்கள்.

யுத்த நெருக்கடி நிலவிய காலத்தில் பதட்டத்துக்கும் பரிதவிப்புக்கும் மத்தியில் - வெளியே போன கணவன் திரும்பி வரும் நேரம் பிந்தினாலோ பள்ளி சென்ற பிள்ளை வீடு திரும்பச் சுணங்கினாலோ பதறித் தவித்த அன்னையரும் மனைவியரும் இன்றெல்லாம் வேலை முடிந்து வீடு திரும்பி விட்ட கணவருக்கோ பிள்ளைக்கோ நிதானமாக உணவு பரிமாற இயலாதவராக - தொ(ல்)லைக் காட்சித் தொடரில் 'தம்மை மறந்து போய் அமர்ந்திருக்கிறார்கள்.

வைத்திய வசதிகள் மிகக் குறைவாய் இருந்த காலத்தில் நோயினால் துன்பப்பட்ட தனது தாயையோ பிள்ளையையோ காப்பாற்ற என்ன விலையும் தரத்தயாராக இருந்த மனிதன், எல்லாவசதிகளும் உள்ளூர் வைத்தியசாலையில் கிடைக்கக் கூடிய ஒரு நிலை தோன்றியிருக்கிற இன்றைய காலத்தில் நோய்வாய்ப்பட்ட தனது தந்தையை உடனிருந்து பராமரிக்கச் சம்பளத்துக்கு ஆள் அமர்த்துகிறான் (தன்னால் பராமரிக்க முடியும் என்ற நிலை இருப்பினும் கூட)

ஆசிரியர் என்பவர் ஒரு வழிகாட்டி - தாய் தந்தையின் பாதுகாப்பிலிருந்து கல்விகற்கும் நோக்கோடு பாடசாலை வரும் பிள்ளைக்கு அவனே தந்தை போலிருந்து கல்வியூட்ட வேண்டியவனாக இருக்கிறான். பிழைகளை உணர்த்தும் நோக்குடன் தண்டனையை ஒரு சிகிச்சை போல வழங்க வேண்டிய அதே ஆசிரியன் ஏதோ எதிரியைப் பழிவாங்குகிற பாணியில் தண்டனை என்ற கட்டத்தைத் தாண்டிக் காயமுண்டாகும்படி கண்டபடி அடிக்கும் சம்பவமும் நிகழ்கிறது. இன்னொரு புறத்தில் அங்ஙனம் தண்டிக்கப்பட்ட மாணவன் பிறகு கும்பல் சேர்த்து அந்த ஆசிரியருக்கு அடிக்கிற சம்பவமும் நிகழ்கிறது.

இவ்வாறாக சமநிலைத் தலைவர்கள் அல்லது ஒரு தளம்பல்கள் ஏன் நிகழ்கின்றன என எல்லாத் தரப்பினரும் யோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். என் வீட்டுக் கூரையில் தீப்பிடித்துக் கொண்ட பிறகு தான் தீயிலிருந்து பாதுகாப்புத் தேடும் முயற்சியில் இறங்குவேன். என ஒவ்வொருவரும் கருதி ஒதுங்கியிருப்பது அத்தனை புத்திசாலித்தமாகப் படவில்லை. எதையெதையோ தாண்டி ஒரு நிலைக்கு வந்திருக்கிறோம். இந்த நிலையில் எமது சாதாரண வாழ்வு தன்னியல்பு கெடாமல் காப்பாற்றப்படுவது குறித்து அனைவரிடமும் சிந்தனை ஆழம் கொள்ள வேண்டியது அவசியம். அவசரமும் கூட.

- ந.சத்தியபாலன்

# ஈராக்கில் கார்க்குண்டுத் தாக்குதல் மாகாண பிரதி ஆளுநர் படுகாயம்!



ஈராக்கின் நஜாவ் நகரில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் - நஜாவ் மாகாண பிரதி ஆளுநர் படுகாயமடைந்ததுடன், ஆறு பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் நஜாவ் மாகாண பிரதி ஆளுநரை இலக்குவைத்து, சதார் ஆதரவுப் படைகளால் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதல் நடைபெற்றவேளை இடையில் அகப்பட்ட பொதுமக்களில் அறுவரே கொல்லப்பட்டனர். காயமடைந்த பிரதி ஆளுநரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை, நஜாவ் நகரில் அமெரிக்க - சதார் ஆதரவுப் படைகளுக்கு இடையில் நேற்றும மோதல்கள் தொடர்ந்தவண்ணமிருந்தன.

"எனது கடைசி இரத்தம் உள்ளவரை நான் சண்டையைத தொடர்வேன்" என சதார் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதேவேளை, சதார் ஆதரவுப் படைகளுக்கு ஈரான் ஆயுத உதவிகளை வழங்கிவருவதாக ஈராக்கின் பாதுகாப்பு அமைச்சர் ஹசீம் சாலன் குற்றஞ்சாட்டியுள்ளார். இஸ்லாமியக் கிளர்ச்சிவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் ஈரானின் தயாரிப்பெனவும், இவையனைத்தும் ஈரானின் எல்லைப்பகுதியூடாகவே கடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நஜாவ் நகரில் தாக்குதலில் ஈடுபடும் இஸ்லாமியக் கிளர்ச்சிவாதிகள் குற்றவாளிகளெனவும் அவர்கள் ஷியா மதப்பிரிவைச் சேர்ந்தவர்களல்லர் எனவும், ஈராக் அரசாங்கம் தெரிவித்தது.

ஆனால், நஜாவ் நகரில் போராடும் இஸ்லாமிய போராளிகள் தமது அமைப்பினரெனவும், அவர்கள் மிக உயர்ந்த இலட்சியத்திற்காகப் போராடுபவர்களெனவும் சதார் தெரிவித்தார்.

# ஈரான் தூதரக அதிகாரி ஈராக்கில் கடத்தப்பட்டார்

## தீவிரவாதிகளின் கடத்தல் தொடர்கிறது

ஈராக்கில் பணிபுரிந்து வந்த ஈரானிய தூதரக அதிகாரியை தீவிரவாதிகள் கடத்திச்சென்றுள்ளனர்.

ஈராக்கில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களைக் கடத்திச்செல்வது இஸ்லாமியத் தீவிரவாதிகளின் வாடிக்கையாகிவிட்டது. வெளிநாட்டவரைப் பணயக்கைதியாகக் கடத்திச் சென்று தலையைத் துண்டிப்பதும், இன்னும் சிலரைப் பணம்வாங்கிக் கொண்டு விடுவிப்பதும் தொடர்கிறது.

இந்த நிலையில் ஈரானிய தூதரக அதிகாரி பெரிடுன் ஜகானியை கடந்த 4 ஆம் திகதி தீவிரவாதிகள் கடத்திச்சென்றுள்ளனர். இந்த அறிவிப்பை துபாயில் உள்ள அராபியத் தொலைக்காட்சி ஒன்று நேற்று முன்தினம் வெளியிட்டது.

பாக்தாத்தில் இருந்து கர்பாலா செலலும் வழியில் இவர் கடத்திச் செல்லப்பட்டார். ஜகானி சமீபத்தில் கர்பாலா பகுதியில் உள்ள ஈரானிய தூதரக அதிகாரியாகப் பதவியேற்றார்.

ஈராக்கைப் பிரிவினைப்படுத்தும் முயற்சியில் ஜகானி ஈடுபட்டுவந்துள்ளதாகவும், அதனால் தான் அவரைக் கடத்திச்சென்றுள்ளதாகவும் தீவிரவாதிகள் அராபியத் தொலைக்காட்சிக்கு அனுப்பிள்ள விடியோ நாடாவில் தெரியப்படுத்தியுள்ளனர். ஜகானியை விடுவிப்பதற்குரிய நிபந்தனை எதையும் அவர்கள் தெரியப்படுத்தவில்லை.

# பலஸ்தீன காஸாப்பகுதியில் இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதல்

(டெல்அவிவ்)

காஸாவின் தென்பகுதியில் அமைந்துள்ள ரபா அகதிமுகாமுக் கருகில் இஸ்ரேல் ஹெலிகொப்ரர்கள், நான்கு ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் தொடர்பான சேதவிபரம் எதுவும் உடனடியாகத் தெரியவரவில்லை. இந்தத் தாக்குதலில் ஒரு ஏவுகணை, மின்வழங்கும் நிலையம் மீது விழுந்ததாகவும், இதனையடுத்து மின்சாரம் தடைப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.





வன்செயல்களைத் தடுப்பதற்காகவே இந்தத் தாக்குதலை தாம் நடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இரண்டாவது தாக்குதல் எகிப்தின் எல்லைப் பகுதியில் நடத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதியிலிருந்த பலஸ்தீன மக்களது வீடுகளைப் புல்டோசர்கள் மூலம் தாக்கி அழித்தமையும் குறிப்பிடத்தக்கது.

மின் வழங்கு நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து வைத்தியசாலை அம்புலன்ஸ்கள் சம்பவ இடத்திற்குச் செல்லமுயற்சித்ததாகவும் - ஆனாலும், அங்கு நிலவிய இருள் காரணமாக அது பலனளிக்கவில்லை எனவும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

# மின்வழங்கும் அணு உலையில் கசிவு ஏற்பட்டு நால்வர் பலி!

## ஜப்பானில் நேற்றுச் சம்பவம்



(ரோக்கியோ)

ஜப்பானிலுள்ள மின்வழங்கும் அணு உலையில் ஏற்பட்ட கசிவு காரணமாக நால்வர் பலியானதுடன் பலர் எரிகாயங்களுக்குள்ளாகினர்.

காயமடைந்தவர்களில் பத்துப் பேர் கடும் எரிகாயங்களுக்குள்ளாகியுள்ளதாகவும், அவர்களில் பலர் மயக்க நிலையில் உள்ளதாகவும், அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிககப்பட்டுள்ளதாகவும், அணு உலைப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த மின் வழங்கும் அணு உலை நிலையத்தை நடத்திவரும் கன்சாய் நிறுவனம் தெரிவிக்கையில்- இந்தக் கசிவு ஏற்பட்டவுடன் மின் விநியோகம் நிறுத்தப்பட்டதாகவும், இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தது.

ஜப்பானில் முப்பது வீதமான மின்சாரம் அணு உலை மூலமே வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

1999 ஆம் ஆண்டிலும் ஜப்பானில இடம்பெற்ற அணு உலைக் கசிவினால் இரண்டு தொழிலாளர்கள் உயிரிழந்ததுடன், நூற்றுக்கணக்கானவர்கள் பாதிப்படைந்தனர்.

அணு உலையில் ஏற்பட்ட கசிவு காரணமாக மீண்டும் அணு உலைகளின் பாதுகாப்புத் தொடர்பாக கேள்வி எழுந்துள்ளதாக ரோக்கியோவிலுள்ள பி.பி.ஸி. செய்தியாளர் ஜொனதன் ஹெட் தெரிவித்தார்.

## 3 கிலோ மீற்றர் நீள புதிய பாலம்

(எதென்ஸ்)

கிரீஸ் நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ளது அந்தியான். இந்த நகரில் 3 கிலோமீற்றர் நீளத்துக்கு புதிதாக ஒரு பாலம் கட்டப்பட்டுள்ளது. கடல் மட்டத்தில் இருந்த 160 மீற்றர் உயரத்தில் இந்தப் பாலம் அமைந்துள்ளது. ஏதென்ஸ் நகரில் வருகிற 13 ஆம் திகதி, 28 ஆவது ஒலிம்பிக் போட்டி நடைபெறுவதையொட்டி அதன் நினைவாக இந்தப் புதிய பாலம் வருகிற 12 ஆம் திகதி திறக்கப்படுகிறது.

# வடகொரியாவுக்கு எதிராகப் போராட்டம்

(சியோல்)

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையே நீண்டகாலமாக இருந்துவந்த. பகைமைப்போக்கு நீங்கி சுமூக உறவு ஏற்படும் நிலை சமீபகாலமாக ஏற்பட்டது. இரு நாட்டவர்களும் தங்கள் உறவினர்களைப் பார்க்கச் செல்லவும் அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால், இப்போது இந்த உறவில் விரிசல் ஏற்பட்டுவிட்டது. வடகொரியா அணு ஆயுதங்களைக் குவிப்பதற்கு தென்கொரியா கடும் கண்டனம் தெரிவித்துவருகிறது.

சியோல் நகரில் வடகொரிய நாட்டின் தேசியக் கொடியை எரித்து தென்கொரிய மக்கள் போராட்டம் நடத்தினார்கள். தென்கொரியாவில் இருந்து வடகொரியாவுக்கு உணவுப் பொருட்கள் அனுப்புவதற்கு தடை செய்யவேண்டும் என்றும் அவர்கள் கோஷம் எழுப்பினார்கள்.

# செயலகத்தின் முன்னால் டிப்ளோமா பட்டதாரிகள் மறியல்








# மீள்குடியமர்வுக்கு அனுமதிகோரி உசன் மக்களின் மறியல்







நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## திருமலை செல்லவிருந்த 95 விடுதலைப்புலிகளுக்கு படையினர் அனுமதி மறுப்பு!

(கொழும்பு)

வன்னியிலிருந்து திருகோணமலைக்கு செல்லவிருந்த 95 விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கு பாதுகாப்பு வழித்துணை வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஓமந்தையில் இருந்து திருகோணமலை மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சம்பூர்வரை செல்வதற்கே பாதுகாப்பு வழங்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த' இவர்களுக்கான பாதுகாப்பை வழங்குமாறு விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்திருந்ததாக பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊடாகவே புலிகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதன் காரணமாகவும், தற்போது அந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பு நிலைமை காரணமாகவும் பாதுகாப்பு வழித்துணை வழங்குவதில்லை என்ற தீர்மானத்தை எடுத்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

## சிறைக்கைதிகளின் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த கைதிகள் தமது போரட்டத்தை நேறறு நிறுத்தினர்.

யாழ்.சிறைச்சாலையின் பிரதம அதிகாரியின் இடமாற்றத்தைக் கண்டித்து நேற்றுமுன்தினம் முதல் சிறைசசாலைக் கைதிகள் உண்ணாவிரதப் போரட்டத்தில் ஈடுபட்டு வந்தார்கள்.

அத்தோடு சிறைச்சாலைக்குள்ளும் பல்வேறு பிரச்சனைகள் தலையெடுத்திருந்தன. எனினும், நேற்று [illegible] சிறைச்சாலைக்கு மட்டக்களப்பின் சிறைச்சாலை அதிகாரியாகக் கடமையாற்றிய இந்திரஜித் என்பவர் வருகைதந்து சிறைச்சாலையின் பிரதம அதிகாரிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதயடுத்து குழப்பங்கள் தணிந்து சிறைச்சாலையில் வழமை நிலை உருவானது.

கைதிகள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டு புதிய அதிகாரியை வரவேற்றனர் எனத் தெரியவருகிறது.

## முஸ்லிம் ஆயுதக்குழுவால் ஏறாவூரில் பெண் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பின் ஏறாவூர் பகுதியில் முஸ்லிம் ஆயுதக் குழுவினர் எனச் சந்தேகிக்கப்படுவோரால் முஸ்லிம் பெண்ணொருவர் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், இரண்டு வீடுகள் மீதும் கிரனைட் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் காட்டுப்பள்ளி எனுமிடத்தில் நேற்று அதிகாலை மூன்று மணியளவில் காயது மொகமட் - ஆயிசா முத்து (வயது 69) எனும் முஸ்லிம் பெண்ணே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்று அதிகாலை காட்டுப்பள்ளியிலுள்ள ஆயிசாமுத்துவின் வீட்டிற்குச் சென்ற முஸ்லிம் ஆயுதக்குழுவினர் அவரது மகனை விசாரித்துள்ளனர். அவர் அங்கு இல்லையென தெரிவிக்கப்படவே அவர்கள் வீட்டிற்குள் சென்று தேடுதல் நடத்த முயற்சித்தனர்.

இந்தவேளை ஆயிசா முத்து வீட்டிற்குள் சென்று சோதனையிட அனுமதிக்காததையடுத்து அவரைச் சுட்டுக்கொன்ற முஸ்லிம் ஆயுதக் குழுவினர் அவரது மகளான பௌசியா அகமட் (வயது 36) என்பவரை சுட்டுக் காயப்படுத்திவிட்டு அங்கிருந்து வெளியேறியதாகவும் ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, காபத்தமுனைப் பகுதியிலும் இரண்டு வீடுகள் மீது கிரனைட் தாக்குதல் அந்தக் குழுவால் நடத்தப்பட்டது.

## பூகம்பத்தை எதிர்நோக்கும்...

அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதுடன், யுத்த நிறுத்த உடன்படிக்கையை உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

இன்று யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களில் 65 வீதமானோர் மீன்பிடித் தொழிலையும், விவசாயத்தையுமே தமது பிரதான தொழிலாகக்கொண்டு வாழ்க்கை நடத்திவருகின்றனர்.

அவர்கள் தமது தொழிற் பிரதேசங்களை உயர்பாதுகாப்பு வலயத்தினால் இழந்து நிற்பதுடன், தமது தொழிலைச் செய்வதிலும் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இன்று யாழ்ப்பாணத்திலிருக்கும் உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதலில் சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

சமாதான முயற்சிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு -

போர்நிறுத்த உடன்படிக்கை உறுதியாகக் கடைப்பிடிக்கப்படுதல்,

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரங்கள் அதிகரிக்கப்படுதல்,

சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான சட்டக் கொள்கை விளக்கங்கள் வலுவாகப் பின்பற்றப்படுதல் வேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள விடயங்களை சமாதான செயலகம் உடனடியாகக் கருத்திலெடுத்துச் செயற்பட வேணடும். எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

### ஜனாதிபதியின் தீர்வு...

தீர்வு காணவேண்டும் என்பதில் அவர் உறுதியாகவுள்ளார். அதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரத்தை அடிப்படையாகக் கொணடு பேச்சுக்களை நடத்துமாறு வலியுறுத்துகின்றனர். அதனை ஏற்றுக் கொள்கிறோம். அதேபோல் ஜனாதிபதியின் ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்களுக்கும் அவர்கள் மதிப்பளிக்க வேண்டும்.

ஜனாதிபதியின் தீர்வுயோசனைகள் விரைவில் வெளியிடப்படும்.

யாழ்.மாவட்டத்தில் யுத்தநிறுத்த ஒப்பந்தமீறல்கள் அதிகளவில் இடம் பெற்றுள்ளன. எனினும், நாம் சமாதானத்தின் மீதான உறுதியான நம்பிக்கையாலும், பொறுப்புணர்வாலும் அவற்றைச் சமாளித்துக் கொண்டு செயற்படுகிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

### உயர் தேசிய...

வழங்கப்பட்டுவரும் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பின் போது தாம் [illegible]க்கப்பட்டிருக்கின்றமையானது, அரசாங்கததுன் சுற்று நிருபத்தையே கேள்விக்கிடமாக்கியுள்ளது.

இதனால் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் தமக்கு சரியான பதில் வழங்கப்படவேண்டுமெனத் தெரிவித்தே நேற்றைய தினம் மறியல் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

யாழ்.செயலகம்முன் நேற்றுக் காலை 8.30 மணிமுதல் நண்பகல் 12.30 வரை இந்த மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டத்தின் முடிவில் யாழ்.மாவட்ட உயர் தேசிய கணக்கியல், வர்த்தக, முகாமைத்துவ வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் வி.தயாபரன் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அ.சிவசுவாமியிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளித்தார்.

இந்தப் போராட்டத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.கஜேந்திரன், சிவநேசன், சிவாஜிலிங்கம், மாவை சேனாதிராஜா போன்றோரும் கலந்து கொணடனர். (ப)

### அரச சமாதான...

னதாஸ் மற்றும் யாழ்.மாவட்டதிலுள்ள வெளிநாட்டு தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் போன்றோரைச் சந்தித்து உரையாடினார்.

தொடர்ந்து நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் யாழ்.மாவட்ட உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை ஜயந்த தனபால சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தினார்.

இந்தச் சந்திப்பில், ஜயந்த தனபாலவின் தொடர்பாடல் பணிப்பாளர் காமினி சேரசிங்கவும் கலந்துகொணடார்.

பொது அமைப்புக்கள் சார்பில் எஸ்.பரமநாதன், சறோஜினி சிவச்சந்திரன், அருட்திரு பேணாட் அடிகளார், எஸ்.தில்லைநாதன், இராமதாஸ் போன்றோர் கலந்துகொண்டனர்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் இங்கு நடைபெற்ற கலந்துரையாடலில், யாழ்.மக்களின் பல்வேறு பிரச்சினைகளும் விளக்கப்பட்டது.

## பட்டதாரிகளின் பிரச்சினைகள் கொழும்பில் இன்று ஆராய்வு!

வேலையற்ற பட்டதாரிகளை அரசசேவையில் நியமனம் வழங்கும் திட்டத்தில் குடாநாட்டு பட்டதாரிகளின் குற்றச்சாட்டுக்கள் இன்று கொழும்பில் நடைபெறும் அரச அதிபர்களுக்கான கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று காலை கொழும்பில் பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சில் இடம்பெறவுள்ள அரச அதிபர்களுக்கான கூட்டத்தில் இந்த விடயம் குறித்து ஆராயவுள்ளதாகத் தெரியவருகிறது.

வேலையற்ற பட்டதாரிகளின் நியமனததில் யாழ்.மாவட்ட உயர்தேசிய கணக்கியல் வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்தும் அரச அதிபர் முன்வைப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (லெ)

## அமெரிக்க வெடிபொருள் அகற்றும் நிபுணர்கள் யாழ். வருகின்றனர்!

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த வெடிபொருள் அகற்றும் நிபுணர்கள் இருவர், இனறு யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளதாக யாழ்.மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் புதைக்கப்பட்டிருக்கும் வெடிபொருட்களை அகற்றும் பணிகள் தொடர்பாக ஆராயவே இவர்கள் இங்கு வருகைதரவுள்ளதாகத் தொிய வருகிறது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வெடிபொருட்கள் அகற்றும் பணிக்காக அமெரிக்காவால் மோப்ப நாய்கள் வழங்கப்பட்டுள்ளமையால் அவற்றின் பணிகள் தொடர்பாக கண்காணிப்பதற்காகவும் இவர்கள் இங்கு வருகை தருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த இயக்குநர் றிச்சாட் கீற்ரும், அதே பிரிவைச் சேர்ந்த பிரதி இயக்குநர் கேணல் ரூவர்ட்சி ஹரிஸுமே யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பிரதேசங்களில் இலங்கை இராணுவம் கண்ணிவெடி அகற்றும் பிரதேசங்களுக்கு விஜயம் செய்து கண்ணிவெடி அகற்றுவது தொடர்பான நிபுணத்துவ ஆலோசனையை இவர்கள் வழங்கவுள்ளனர்.

### ஜனாதிபதியுடன் ஜே.வி.பி இன்று முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவிற்கும், ஜே.வி.பி க்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இன்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் எதிர் நோக்கும் சிக்கல்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்படவுள்ளது.

## ஜே.வி.பியைச் சமாளிக்க...

எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

இதனிடையே சமாதான முயற்சிகள் தொடர்பாக வெளிப்படையான கருத்துக்களை ஜனாதிபதி சந்திரிகா வெளியிடுவதை கடந்த சில நாட்களாக தவிர்த்துவருவதாகத் தெரியவருகிறது.

சமாதான முயற்சிகள் தேக்கமடைந்திருந்த சூழலில் கடந்த வாரம் திடீரென ஜனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகளை ஆரமபிக்குமாறு நோர்வே தரப்பைக் கேட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே கடந்த சில நாட்களாக சமாதான நிலை குறித்து கருத்துக்களை வெளியிடுவதை அவர் தவிர்த்து வருகிறார். மேலும் கண்டி நீர் விநியோகத் திட்டத்தை திறந்துவைத்த ஜனாதிபதி சந்திரிகா அங்கு அரசியல் குறித்து எதுவும் பேசவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (01)

## பிரதேச செயலகம் முன்பாக...

விளையாட அனுமதிக்குமாறும் கோரியே மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்குச் சாதகமான பதில் இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்காவிடின் தாம் தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்தனர். இந்த மறியற் போராட்டத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன், சிவனேசன் ஆகியோர் சென்று பார்வையிட்டதுடன் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினர்

போராட்ட முடிவில் யாழ்.மனித உரிமைஆணைக்குழுவுக்கும், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் மகஜர் கையளிக்கப்பட்டது.

ஞானோதய அக்கடமி
சங்கத்தானை | A/L 2005 Day Class கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் | சாவகச்சேரி
ஆரம்பம்: 11.08.2004 காலை 12.00 மணி (பு.நே)
தென்மராட்சியில் புகழ்பூத்த ஆசிரியர் குழாம்
TA : திரு. இரா.அகிலன்
HIN : திரு. சுரேஸ்
GEO : திரு. மயூரன்
HIS : திரு. பத்மன்
DRA : திரு. ராம்
CHCR : திரு. சுதா
ECO : திரு. அன்ரனி, திரு லோகசிங்கம்
COM : திரு. பசில்
ACC : திரு. பார்த்தீபன்
LOG : திரு. ஜெயசுரேஸ்
PSY : திரு. பொன்சந்துரு
ENG : திரு. ஜோதி
(சி-2919)

Day class
ஆரம்பம் ஓகஸ்ட் 16 காலை 8.30
A/L 2005 (கலை வர்த்தகப் பிரிவுகள்)
ஆசிரியர் குழு
கணக்கீடு - D.SAM
பொருளியல் - ஜெயக்குமார்
வணிகக்கல்வி - பசில்
அளவையியல் - மோகன்
இந்துநாகரீகம் - ஜோதீஸ்வரன்
பொதுவினா, வணிகப் புள்ளிவிபரவியல் } தவசேகர்
புவியியல் - இக்னேசியஸ்
தமிழ் - மீரா
நாடகம் - சந்திரன்
கிறிஸ்தவம் - மல்லிகா
வரலாறு - விஜயரூபன்
ஆங்கிலம் - சுதர்சன்
(சி-2923) DMI யாழ்.நகர்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.